பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 23

வியாழக்கிழமை
19 டிசெம்பர் 2024

மார்கழி 04 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## காற்றின் தரம் யாழில் மோசம்

யாழ்., டிசெ. 19
யாழ்ப்பாணத்தில் காற்றின் தரம் மிகையாகப் பாதிக்கப்பட ☞15

# பயங்கரவாதத் தடைச்சட்டம்; தற்போது 30 பேர் சிறையில்

கொழும்பு, டிசெம்பர் 19

சட்டமா அதிபர் திணைக்களத்தின் தரவுகளின்படி கடந்த ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதியில் விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய குற்றங்களுக்காக 6 பேரும், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுடன் தொடர்புடைய குற்றங்களுக்காக 24 பேரும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞08

யாழ்ப்பாணத்தில் இதுவரை

## எலிக்காய்ச்சலால் 110 பேர் பாதிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 19
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் காரணமாக, இதுவரை 110 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். ☞15



## அரச நிதிக்குழுவின் தலைவராக ஹர்ஷ!

கொழும்பு, டிசெ. 19
ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ☞16

# அநுரவால் நேற்று வரிச் சலுகைகள்

வரி விலக்கு வருமானம் ரூபா 150,000
12.5 பில்லியன் டொலர் மறுசீரமைப்பு
15.1 பில். டொலர் நிதியிருப்பு இலக்கு

கொழும்பு, டிசெ. 19
ஜனாதிபதி அநுரகுமாரவால் பல்வேறுபட்ட வரித்திருத்தங்கள் மற்றும் வரிச் சலுகைகள் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளன. வரிவிலக்கின் குறைந்தபட்சத் தொகை முதல், சேவை ஏற்றுமதி வரையில் அனைத்துத் துறையிலும் கணிசமான அளவுக்கு வரிச் சலுகைகளை அவர் அறிவித்துள்ளார். ☞15

ஆளுநருக்கு எதிரான

## ஜெகூவின் வழக்கை ஏற்றது நீதிமன்றம்!

யாழ்ப்பாணம், டிசெ. 19
தம்மை வடக்கு மாகாண விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, மீன்பிடி, நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் பதவியிலிருந்து மாகாண ஆளுநர் நீக்கியமையை வெற்றும் வெறிதாக்குமாறு கோரி மரியதாசன் ஜெகூ, ☞15

## திரைமறைவு ஒப்பந்தம் இந்தியாவுடன் இல்லை

வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 19
இலங்கைக்குப் பாதகத்தை ஏற்படுத்தும் வகையில் இந்தியாவுடன் எந்தவொரு ஒப்பந்தமும் கைச்சாத்தாகவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். ☞15

மருத்துவர் சத்தியமூர்த்திக்கு எதிராக

## அவதூறு பரப்ப நீதிமன்று தடை!

அர்ச்சுனா எம்.பி.க்குக் கட்டாணை

கொழும்பு, டிசெ. 19
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்திக்கு எதிராக, அவதூறான கருத்துகள் தெரிவிப்பதற்கு ☞15

யாழ்ப்பாணத்தில் உள்ள

## வெளித்தரக் கண்காணிப்பகம் ஒரு மாதமாக இயங்காநிலை

யாழ்ப்பாணம், டிசெ. 19
யாழ்ப்பாணத்தில் உள்ள வெளித்தரக் கண்காணிப்பு நிலையம் சுமார் ஒரு மாதம் வரை இயங்காத நிலையில், அதனை மீளச் செயற்படுத்துவதற்கு இன்றையதினம் கொழும்பில் இருந்து குழுவொன்று வருகைதரவுள்ளது. ☞15

## புகலிடக் கோரிக்கைக்காக போலிக்கடிதம் தயாரிப்பு!


முல்லைத்தீவில் இருவர் கைது

முல்லைத்தீவு, டிசெ. 19
வெளிநாட்டில் புகலிடக் கோரிக்கையைப் பெறுவதற்காக, குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் கடிதம் போன்று போலியான கடிதத்தைத் தயாரித்த முல்லைத்தீவைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
பிரிட்டனில் இருக்கும் நபர்களுக்காகவே அவர்கள் இந்தக் கடிதத்தைத் தயாரித்துள்ளனர் என்றும், குற்றப் புலனாய்வுத் ☞08




'உந்த எலித்தொல்லைக்கு எப்பதான் முடிவுகட்டுவினமெண்டு தெரியேலையே'

# 350 பவுண் நகை திருட்டு; தப்பியோடியவரும் கைது!



யாழ்ப்பாணம், டிசெ. 19
யாழ்ப்பாணத்தில் கோப்பாய், கோண்டாவில், மானிப்பாய் ஆகிய பகுதிகளில் கடந்த இரண்டு வருடங்களாக 350 பவுணுக்கும் மேற்பட்ட நகைகள் திருடப்பட்ட வழக்கில், இரண்டாவது சந்தேகநபர் (பிரதான சந்தேகநபரின் மனைவி) கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். இலங்கையில் இருந்து இந்தியாவுக்குச் சென்று, பின்னர் அங்கிருந்து வெளிநாடு ஒன்றுக்குத் தப்பிச் செல்ல முற்பட்ட நிலையிலேயே, ஏற்கனவே ☞08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வித் தகைமைகளால் நாடாளுமன்றில் தர்க்கம்

கொழும்பு, டிசெ. 19

**நாடாளுமன்றம் நேற்று முற்பகல் சபாநாயகர் மருத்துவக் கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடியபோது கல்வித் தகைமைகள் தொடர்பில் பல்வேறு வாதங்கள் இடம்பெற்றன.**

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. யான காவிந்த ஜெயவர்த்தன தனது கல்வி,பட்டச் சான்றிதழ்களை காட்டி சபையில் உரையாற்றினார்.

அதேவேளை பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி, தான் ஒரு விசேட மருத்துவ நிபுணர் அல்லர் என்றும் தான் உத்தியோகபூர்வமாக அவ்வாறான தலைப்பைப் பயன்படுத்தியதில்லை என்றும் தேர்தல் பிரசாரத்தின் போதும் அதனைப் பயன்படுத்தவில்லை என்றும் திட்டவட்டமாக மறுத்தார்.

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தனது கல்வித் தகைமை தொடர்பான சான்றிதழ்களையும், ஆவணங்களையும் நாடாளுமன்றத்தில் முன்வைத்தார். அவை பொய்யென எவரேனும் நிரூபித்தால் அரசியலில் இருந்து விலகுவதற்கு தயார் எனவும் அறிவித்தார்.

அதேவேளை ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யான சமிந்ராணி கிரியெல்ல, இங்கு அரச தரப்பு எம்.பி. ஒருவர் எனது பரிஸ்டர் பட்டம் தொடர்பில் கேள்வி எழுப்பினார். அதற்கான அனைத்து சான்றிதழ்களும் என்னிடம் உள்ளன என்று தெரிவித்தார்.

இதற்குப்பதிலளித்த நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, அந்தப் பட்டம் அந்த நாட்டில் மட்டுமே செல்லுபடியாகும். அது பழைய கால நடைமுறை. இப்போது அதனைப் பயன்படுத்தமுடியாது. சிலர் அதனை இங்கு இப்போதும் பயன்படுத்துகின்றனர். குறிப்பாக அஜித் பி. பெரேரா எம்.பி.பயன்படுத்துகின்றார் - என்றார். (ச-44)

# பஸிலை நாடுகடத்துமாறு ட்ரம்புக்கு மேர்வின் கடிதம்

கொழும்பு, டிசெ.19

பஸில் ராஜபக்சவை நாடு கடத்துமாறு கோரி அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள டொனால்ட் ட்ரம்புக்கு கடிதம் எழுதவுள்ளதாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இணைய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பஸில் ராஜபக்ச எனது உறவு முறைப் பெண்ணையே மணம் முடித்துள்ளார். இருந்தாலும் ஊழல்வாதி, கொள்ளைக்காரன்.

பஸில் ஊழல்வாதி என்பதற்குரிய சான்றுகள் என்வசம் உள்ளன. உதயங்க வீரதுங்கவுக்கும் அமெரிக்கா தடை விதித்துள்ளது. அதேபோன்று பஸிலையும் அமெரிக்கா நாடு கடத்தவேண்டும் - என்றார். (ரி-44)

# 39 நாடுகளுக்கு விரைவில் இலவச விசா

கொழும்பு, டிசெ. 19

இந்தியா உட்பட 39 நாடுகளின் குடிமக்களுக்கு விசாக்களை இலவசமாக வழங்கும் வர்த்தமானி அறிவிப்பை அரசாங்கம் விரைவில் வெளியிடும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் அனைத்து நாடுகளுடனும் சாதகமான உறவுகளை விரும்புகிறது.

ஒரு புதிய அரசாங்கமாக, சீனாவுடனும், இந்தியாவுடனும் நல்ல உறவைக் கொண்டிருக்கவேண்டும் என்றே நம்புகிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# பட்டம் பெற்றதில் சலுகையா? நிரூபித்தால் பதவி துறப்பேன்

## நாமல் குமுறல்



கொழும்பு, டிசெ. 19

சட்டக் கல்லூரி பரீட்சையின்போது எனக்கு சிறப்புச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை நிரூபித்தால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறப்பதற்கு நான் தயார் என்று அமைச்சர் வசந்த சமரசிங்கவுக்கு சவால் விடுத்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச.

நான் தனியாக ஏசி அறையில் பரீட்சை எழுதினேன் என்றும் முழு அரசியல் பலத்தைப் பயன்படுத்தி சட்டத்தரணியானார் எனவும் அமைச்சர் வசந்த சமரசிங்க குற்றச்சாட்டு முன்வைத்துள்ளார்.

முடிந்தால் இதனை நிரூபியுங்கள். இந்தக் குற்றச்சாட்டு எமது நாட்டு நீதிக்கட்டமைப்புக்கு விடுக்கப்பட்டுள்ள சவால் ஆகும். சட்டக்கல்லூரியின் நம்பகத்தன்மைமீதான தாக்குதலாகும். எனவே இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்படவேண்டும் எனவும் நாமல் ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# பெருந்தொகை செலவிட்டு அமெரிக்கா சென்றது ஏன்?

## ஜனநாயக முன்னணி கேள்வி

கொழும்பு, டிசெ.19

சர்வதேச நாணயநிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதியுதவி குறித்து செயலியின் மூலமாக விவாதம் நடத்த நாணயநிதியம் ஒப்புக்கொண்ட போதிலும், மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகள் பெரும் தொகையை செலவிட்டு அமெரிக்காவின் வொஷிங்டனுக்குச் சென்றது ஏன் என்று புதிய ஜனநாயக முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்ற வாய்மூல விடைக்கான வினா வேளையின்போது மேற்கண்டவாறு கேள்வியை முப்பினார்.

இதற்கு எழுந்து பதிலளித்த பதில் நிதியமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும,

கலந்துரையாடல்களின் சிக்கலான தன்மை,சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் நடத்த திட்டமிடப்பட்ட கலந்துரையாடல்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் காரணமாக வொஷிங்டன் கலந்துரையாடலில் பங்கேற்க அரசாங்கம் தீர்மானித்தது. அதிகாரிகளின் விமான செலவுக்காக 7.05 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. 38587 டொலர்கள் பயணத்துக்காக செலவிடப்பட்டது. நிதி அமைச்சின் அதிகாரிகள் விமானத்தில் வணிக வகுப்பில் பயணிக்கவில்லை - என்றார். (ச-இ)

# மொஹமட் நிசாம் சத்தியப்பிரமாணம்

கொழும்பு,டிசெ.19

ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக மொஹமட் நிசாம் காரியப்பர், சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன முன்னிலையில் நேற்றுப் புதன்கிழமை பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடைத்த தேசியப்பட்டியலில் உள்ளீர்க்கப்பட்ட புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய வர்த்தமானியை தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த 12ஆம் திகதி வெளியிட்டிருந்தது. அதற்கமைய அந்த நான்கு உறுப்பினர்களில் அர்ஜுன சுஜீவ சேனசிங்க, முகம்மது இஸ்மாயில் முத்து முஹம்மது மற்றும் மனோ கணேஷன் ஆகிய மூவர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பதவிப்பிரமாணம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-33)

# ஐ.எம்.எப். ஒப்பந்தத் திருத்தம் சந்தர்ப்பத்தை விலக்கியது ஏன்?

## ஹர்ஷ டி சில்வா கேள்வி

கொழும்பு, டிசெ.19

சர்வதேச நாணயநிதியத்தின் ஒப்பந்தத்தில் திருத்தம் மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தும் அரசாங்கம் ஒரு வசனத்தையேனும் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்காது ஏன் என எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கேள்வியெழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை வழிமொழிந்து உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்தியாவுடன் நாங்கள் சிறந்த உறவை வைத்திருக்கவேண்டும். எப்போதும் எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடிய நாடாகும். எனினும் பெற்றோலியக் குழாய் தொடர்பில் இந்தியாவுடன் எந்த தொடர்பையும் ஏற்படுத்திக்கொள்ளப்போவதில்லை என தேசிய மக்கள் சக்தி தேர்தலின் போதும் அதிகாரத்துக்கு வந்த பின்னரும் தெரிவித்து வந்தது. அதேபோன்று வலுசக்தியை இணைப்பதில்லை எனவும் தெரிவித்து வந்தது.

ஆனால் தற்போது இந்த இரண்டு விடயங்களுக்கும் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாகவே தெரியவருகிறது. அத்துடன் சர்வதேச நாணயநிதியத்தின் ஒப்பந்தத்தில் திருத்தம் மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தும் அரசாங்கம் ஒரு வசனத்தையேனும் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. மூன்றாம் காலாண்டில் மொத்த தேசிய உற்பத்தி 5.5ஆக அதிகரித்துள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. இதற்கான பெருமையை இந்த அரசாங்கத்திற்கு பெற்றுக்கொள்ள முடியாது - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பவளவிழாவில் தமிழரசுக்கட்சி

யாழ்ப்பாணம், டிசெ. 19

இலங்கைத் தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபக தலைவர் தந்தை செல்வாவின் சிலைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களால் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர்களான மாவை சேனாதிராஜா, சி.வி.கே. சிவஞானம், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். (ச-25, 27,66)

# தென்னை செய்கைக்கு உரமானியம்

கொழும்பு, டிசெ. 19

தற்போதைய தேங்காய்நெருக்கடிக்குத் தீர்வாக தென்னை விவசாயிகளுக்கு உர மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதி அமைச்சர் சமந்த வித்யாரத்த தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் 55,000 மெற்றிக்தொன் உரத்தில் 27,500 மெற்றிக் தொன் தென்னைச் செய்கையாளருக்கு வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



# அதானியின் திட்டங்கள் அநுர பச்சைக்கொடி

கொழும்பு, டிசெ. 19

அதானி குழுமத்தின் ஏனைய நாடுகளுடனான செயற்பாடுகள் தொடர்பில் தமது அரசாங்கம் அக்கறை கொள்ளவில்லை மாறாக இலங்கையில் அந்தக் குழுமத்தின் செயற்பாடுகளில் மாத்திரமே கவனம் செலுத்துவதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமது நிலையான அரசாங்கம் மேலும் இந்திய முதலீடுகளை எதிர்பார்க்கிறது. அதானி குழுமம் ஏனைய நாடுகளுடன் எவ்வாறு செயற்படுகிறது என்பது தொடர்பில் நாங்கள் கவனத்திற்கொள்ளவில்லை. அந்தக் குழுமம் எங்களுடன் எவ்வாறு செயற்படுகிறது என்பதே முக்கியம்.

கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனைய அபிவிருத்தி திட்டத்துக்காக அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திடம் முன்வைத்த நிதியுதவிக்கான கோரிக்கையை அதானி குழுமம் மீளப் பெற்றுள்ளது. ஆனாலும் அந்த திட்டத்துக்கான உள் நிதி திரட்டல்கள் மூலம் நிதியளிப்பதாக அதானி குழுமம் அறிவித்துள்ளது - என்றார். (ச-இ)

# புலமைப்பரிசில் பரீட்சை டிசெ.31 இறுதித் தீர்ப்பு

கொழும்பு, டிசெ. 19

நடைபெற்று முடிந்த தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாளில் மூன்று கேள்விகள் கசிந்தமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் மீதான வழக்கின் தீர்ப்பை எதிர்வரும் 31ஆம் திகதி வழங்குவதாக உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

யசந்த கோதாகொட, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனுக்கள் மூன்று நாள்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. (ச-இ)

வவுனியாவில்

# இவ்வருடத்தில் 45 பேர் மாரடைப்பால் மரணம்

வவுனியா, டிசெ. 19

வவுனியா பொது மருத்துவமனையில் இவ்வாண்டு ஜனவரி முதல் ஒக்ரோபர் வரையிலான 10 மாத காலப்பகுதியில் மாரடைப்பால் 45 பேர் மரணமடைந்துள்ளனர்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கோரப்பட்ட தகவலுக்கு அமைய குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# துப்பாக்கி வடிவில் இரத்தினக்கல்

கொழும்பு, டிசெ. 19

இரத்தினபுரி எலபாத்த பிரதேசத்திலுள்ள இரத்தினக்கல் சுரங்கத்தில் கைத்துப்பாக்கி போன்ற வடிவிலான இரத்தினக்கல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியிலுள்ள இரத்தினக்கல் வியாபாரி ஒருவருக்குச் சொந்தமான சுரங்கத்தில் குறித்த கல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




வீடுவாசல்களில வளர்க்கிற ஆடுமாடுகள் திடீரெண்டு செத்தால், அந்த வீட்டுக்காரருக்கு வரவேண்டிய சாவு இந்த ஆடுமாடுகளுக்கு வந்ததெண்டு நினைச்சு ஆறுதல்படுகிற பழக்கம் எங்களிட்ட இருக்கு. வீடுவாசலில மட்டுமில்ல றோட்டுவழியவிலையும் மனிசருக்கு வாற ஆபத்தை கண்டுத்தாச்சிப் பசுமாடொண்டு முந்தநாள், தானே வாங்கிச் செத்திருக்கு. யாழ்ப்பாணம் ரவுணுக்கு கிட்டவா இருக்கிற தட்டாதெருச் சந்தியிலதான் உந்தச் சம்பவம் நடந்திருக்கு. றோட்டுக்கரையில ஒரு லைட் போஸ்ட். அதைச் சுத்தி பத்தைமாதிரி கொடி படர்ந்திருக்கிறதால, அந்தத் தூண் எங்க இருக்கெண்டே ஆக்கள் கண்டுபிடிக்கேலாது. பத்துப்பதினைஞ்சு நாளைக்கு முதல் அந்த லைட் போஸ்ட்டில இருக்கிற 'பல்ப்' எரியாமல் விட்டிட்டு. இது முனிசிபல்காரருக்கும் தெரியும். ஆனால் அவை அந்தத் தூணைச் சுத்தியிருக்கிற பத்தையை வெட்டவுமில்லை, ஏன் லைட் எரியாமல் விட்டது எண்டு பாக்கவுமில்லை. ஆனால் அந்தப் போஸ்ட்டுக்கு எதிர்த்திசையில கொஞ்சம்தள்ளி நிக்கிற வடைவண்டில் மட்டும் முனிசிபல்காரரின்ர கண்ணை உறுத்தியிருக்குது.

அந்தக் கடை போய்வாற ஆக்களுக்கு இடைஞ்சலா இருக்கெண்டு சொல்லி, இந்த லைட்போஸ்ட்டுக்கு கீழ வடைவண்டிலைக் கொண்டந்து யாவாரத்தைச் செய்யச்சொல்லி முனிசிபல்காரர் ஆய்க்கினை குடுத்திருக்கினம். வடைவண்டில் வைச்சிருக்கிறவரும் 'இண்டைக்கு போறன், நாளைக்கு போறன்' எண்டு வண்டில் விட்டபடி இருந்திருக்கிறார். யாவாரம் நல்லா நடக்கிற இடத்தை விட்டிட்டு கொஞ்சம் தள்ளிப்போனால் இப்பிடி லாபம் வருமோ எண்ட சென்ரிமெண்டாலதான் அவர் போஸ்ட்டுக்கு கீழ போகாமல் இழுத்தடிச்சவரெண்டு சொல்லுகினம். முனிசிபல்காரர் சொன்னபடி, அந்தாள் வண்டில் கடையை இடம் மாத்தியிருந்தால் மாட்டுக்குப் பதிலா அவருக்குத்தான் கறண்ட் அடிச்சிருக்கும்.

உந்தப் புயலோட மழை வரேக்க , போஸ்ட்டில இருக்கிற வயர் ஏதோ அறுந்து இரும்புத்தூணில முட்டினபடி இருந்திருக்கு. அதுதான் அண்டைக்குப் பிறகு லைட் எரியாமல் விட்டிருக்கு. முனிசிபல்காரர் இந்த ரண்டுகிழமையா ஏன் லைட் எரியேலை எண்டு பார்த்திருந்தால் மாட்டின்ர உயிர் தப்பியிருக்கும். பாவம், அந்தக் கண்டுத்தாச்சி மாடு தன்ர உயிரைக் குடுத்து சனத்தின்ர உயிரைக் காப்பாத்தி இருக்கு. ஆரும் போய் தூணைப் பிடிச்சிருந்தால் அவைதான் செத்திருப்பினம். இந்த இரும்புப்போஸ்ட்டில லைட் போட்டது பிழையில்லை. ஆனால் அதைச் செடிகொடி பரவாமல், அடிக்கடி பராமரிச்சிருக்கவேணும். கடையளுக்கு வரிக்காசு வாங்கிறதில முனிசிபல்காரர் காட்டிற அக்கறையை இப்பிடி பராமரிப்பிலையும் காட்டினால், மாடு செத்தது மாதிரியான அசம்பாவிதங்கள் நடக்காதெல்லோ.

எண்டு சம்பவ இடத்தில நிண்டவை சொல்லுகினம். மாடு செத்தபிறகு வெட்டின செடிகொடியை முதலே வெட்டியிருந்தால் அதை மாடும் சாப்பிடப் போயிருக்காது, இப்பிடி அநியாயமாச் செத்துமிருக்காதே. இனியாவது கொஞ்சம் அக்கறையா முனிசிபல்காரர் நடப்பினமோ?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சேர்ப்பு பரீட்சை

யாழ்ப்பாணம், டிசெ.19

வடக்கு மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் - 3 பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப் பட்ட போட்டிப்பரீட்சை வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவால் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பா ணம், வவுனியா, மன்னார், கிளி நொச்சி ஆகிய 4 மாவட்டங்களி லும் இடம்பெறவுள்ளது.

பரீட்சைக்குரிய அனுமதி அட்டை கள் பரீட்சார்த்திகளுக்கு வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பரீட்சைக்கு விண்ணப்பித்து பரீட் சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் எதிர்வ ரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தினுள் 021 2219939 எனும் மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு வின் பரீட்சைப் பிரிவின் தொலை பேசி இலக்கத்துடன் மாத்திரம் தொடர்பு கொள்ளுமாறும், அனு மதி அட்டை கிடைக்கப் பெற்றவு டன் அதில் குறிப்பிடப்பட்ட விவரங் களைச் சரி பார்த்து மறுபக்கத்தில் கோரப்படும் விவரங்களை உடன டியாகப் பூரணப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

முழுமையாகப் பூரணப்படுத்தாத அனுமதி அட்டையுடன் பரீட்சைக் குத் தோற்றுவதற்கு வருகைதரும் பரீட்சார்த்திகள் எக்காரணம் கொண்டும் பரீட்சை எழுதுவ தற்கு அனுமதிக்கப்படமாட்டார் கள் என வட மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு அறிவித் துள்ளது. (ச-45-10)

# ஒளிவிழா

கிளிநொச்சி, டிசெ. 19

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஏற் பாட்டில், ஒளிவிழா பிரதேச செய லக மாநாட்டு மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது..

பிரதேச செயலர் த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் விழா வில் விசேட அழைப்பாளர்களாக பளை பிரதேச கத்தோலிக்க பங் குத்தந்தை அருட்பணி எவ்.அன் ரன் ஜோர்ஜ் அடிகள், கிளாலி கல்வாரி தேவாலய போதகர் த. ஞானப்பிரகாசம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். பிர தேச தேவாலய குழுக்களின் பாடல் மற்றும் நடனநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ச-25, 9)



# படகு விபத்து!

யாழ்ப்பாணம், டிசெ.19

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு கடல் பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கடல் கொந் தளிப்பின்போது மீன்பிடிக்கச் சென்ற படகு ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. படகில் பயணித்த இரு வரும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியதுடன் ஒரு தொகுதி மீன்பிடி வலைகள் கடலுடன் அடித்துச் செல் லப்பட்டுள்ளன. (ச-22, 27)

# பொதுக்கூட்டம்

சாவகச்சேரி, டிசெ. 19

தென்மராட்சி தெற்கு மறவன்புலவு கமக்கார அமைப்பின் வருடாந்த பொதுக்கூட்டம், மற வன்புலவு பொது நோக்கு மண்டபத்தில் நாளை வெள்ளிக்கி ழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறும்.


நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு இடம்பெறவுள் ளதால் அமைப்பின் அனைத்து அங்கத்த வர்களையும் வருகை தருமாறு தலைவர் சி. திருஞானசம்பந்தர் அறி வித்துள்ளார். (ச-25, 9)



இலங்கை தேசிய மருத்துவமனைப் பணிப்பாளர் மற் றும் களுபோவளை போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் ஆகியோர் யாழ். போதனா மருத்துவம னைக்கு வருகை தந்து மரக்கன்றுகளை கடந்த ஞாயிற்றுக்கிழமை நடுகை செய்தனர். (ச-45-125)

# லான்ட் மாஸ்டருடன் சொகுசு பஸ் விபத்து

சாவகச்சேரி, டிசெ. 19



கொழும்பிலிருந்து பயணி களை ஏற்றி வந்த அதிசொ குசு பேருந்து ஒன்றும் லான்ட் மாஸ்டரும் ஒன்றோடு ஒன்று மோதிவிபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க் கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தென்மராட்சி கொடிகாமம் பகுதியில் நேற்றுப் புதன்கிழமை காலை இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் சொகுசுப் பேருந்தின் நடத்துநர், உழவு இயந்திரத் தின் சாரதி ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் சாவ கச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சைகளுக்காக சேர்க் கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசார ணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-25, 66, 27,159)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவு கிடைக்கும். தாய்மாமன் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியங்கள் சற்று இழுபறிக்குப் பிறகு சாதகமாக முடியும். சகோதரர்கள் கேட்கும் உதவியை செய்து தருவீர்கள்.

**மிதுனம்:** இன்று எதிலும் பொறுமையுடன் செயற்படவேண்டும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கடகம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. எதிர்பாராத பயணங்களால் உடல் அசதியும் மனச் சோர்வும் உண்டாகும். திடீர் செலவுகளால் கையிருப்பு கரையும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**கன்னி:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தையுடன் ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கும். உறவினர்களின் வருகை மகிழ்ச்சி தரும். அவர்கள் மூலம் சுபநிகழ்ச்சி ஒன்றுக்கான முயற்சி அனுகூலமாக முடியும்.

**துலாம்:** மகிழ்ச்சிகரமான நாளாக இருக்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வருவது மகிழ்ச்சி தரும். சிலருக்கு அக்கம்பக்கத்தில் உள்ளவர்களால் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**விருச்சிகம்:** உற்சாகமும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் பணவரவுக்கும் பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு.

**தனுசு:** அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். குடும்பத்தில் மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. தாயின் உடல் ஆரோக்கியத்துக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**மகரம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். அக்கஉ ம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமான சூழ்நிலையே காணப்படும்.

**கும்பம்:** புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும், பிள்ளைகளால் வீண்செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. உணவு தொடர்பான அலர்ஜி ஏற்படக்கூடும்.

**மீனம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். மனதில் தேவையற்ற குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். கணவன் மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால், ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# சுவாசிக்கச் சுதந்திரம் கொடுங்கள்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இயங்கும் தனியார் நிறுவனங்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் பகுதியளவிலும், ஞாயிறுதினங்களில் முழுமையாகவும் விடுமுறை வழங்கப்படவேண்டும் என்று அனைத்துக் கல்வி நிறுவனங்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார் யாழ்ப்பாணம் பதில் மாவட்டச் செயலரான மருதலிங்கம் பிரதீபன். ஒன்பதாம் தரத்துக்கு உட்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் இந்த விடுப்பு கட்டாயம் வழங்கப்படவேண்டும் என்பதில், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது தனியார் கல்வி நிறுவனங்களின் தலைவர்களும் உடன்பட்டிருக்கின்றனர். யாழ்பாணம் மாவட்டச் செயலகத்தில் இவ்வாறான கலந்துரையாடல் இடம்பெறுவது இதுவொன்றும் முதல்முறையல்ல. இதற்கு முன்னரும் இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. எனினும், துரதிர்ஷ்டவசமாக அனைத்து நடவடிக்கைகளும் தோல்வியில் முடிந்திருக்கின்றன என்பதே உண்மை.

மாணவர்களின் மூளைகளுக்கு ஓய்வு கொடுங்கள், மாணவர்களை கற்றலுக்கு அப்பாற்பட்ட விதானச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள் என்று சமய அமைப்பினரும், கலை கலாசார நிறுவனத்தினரும், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களும் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றனர். கிட்டத்தட்ட கடந்த 10 ஆண்டுகளாக இந்த வலியுறுத்தல்கள் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்துகொண்டுதான் உள்ளன. எனினும், எந்தப் பயனும் இல்லை. ஆதலால், இம்முறையாவது விட்டுக் கொடுப்பின்றி இந்த விடயத்துக்கு செயல் வடிவம் கொடுக்கப்படவேண்டும்.

இதேவேளை, இது யாழ்ப்பாணத்துக்கு மட்டுமான பிரச்சினையல்ல. வடமாகாணத்தில் தனியார் கல்வி நிறுவனங்களின் ஆக்கிரமிப்பு மிகையாக அதிகரித்திருக்கின்றது. மாணவர்களின் ஓய்வு நேரங்களை தனியார் கல்வி நிறுவனங்கள் முற்றுமுழுவதுமாக விழுங்கிக்கொண்டிருக்கின்றன. எனவே, மாகாணம் தழுவிய ரீதியில் இந்தப் பொதுவிடுமுறை ஏற்படுத்தப்படவேண்டும். இதற்கு, இந்த விடயத்தில் வடமாகாண ஆளுநர் தலையிட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

போதைப்பொருள் கலாசாரம் இன்று தமிழர் தாயகத்தில் எங்கும் விரவியிருக்கின்றது. அனேகமான மாணவர்கள் இந்த உயிர்கொல்லிப் போதைப்பொருள்களுக்கு அடிமைப்பட்டவர்களாக இருக்கின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமை மாற்றம்பெறவேண்டுமாயின், கற்றலுக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளை நோக்கி மாணவர்களை நகர்த்திச் செல்வது காலத்தின் கடமையாகும். பல்துறை வித்தகர்களாக, ஆன்மிக அறிவுள்ளவர்களாக, கலாசாரம் காக்கின்றவர்களாக, கலைகளை நேசிப்பவர்களாக மாணவர்கள் மாற்றம்பெறவேண்டுமாயின் அவை தொடர்பான தேடல் அவர்களுக்குள் திணிக்கப்படவேண்டும். மாணவர்களின் சிந்தனைகள் பரவலாக்கப்படவேண்டும்.


பாடவிதானங்களுக்கு அப்பாற்றப்பட்ட சிந்தனைகளை வளர்ப்பதென்பது, வெறுமனவே புத்தகத்தை மட்டும் மையப்படுத்திய கற்றல் முறைகளால் சாத்தியமாகிவிடாது. இந்தப் புரிதல் முதலில் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களிடம் ஏற்படுத்தப்படவேண்டும். பாடசாலைக் கற்றல் - மேலதிக வகுப்புகள் - வீட்டுப் பாடங்கள் - மனனச் செயற்பாடுகள் என்ற 'இறுக்கமான இயந்திரமய' கற்றலில் இருந்து ஒரு நாளாவது மாணவர்களுக்கு விடுதலை கொடுங்கள். அவர்களின் மனங்களையும், இதயங்களையும் இளகப்பண்ணுங்கள். சிந்தனை வெளியை அவர்களுக்காகத் திறந்து விடுங்கள். கலைகளையும், கலாசாரத்தையும், பண்பாடுகளையும், விழுமியங்களையும், ஆன்மிகத்தையும் நேசிக்கவும் சுவாசிக்கவும் அவர்களுக்கு வழிகாட்டுங்கள். இன்றைய மாணவ சமூகம் போதையை நோக்கியும் - சீரழிவை நோக்கியும்நகர்வதற்கு 'குருவியின் தலையில் வைக்கப்பட்ட பனங்காய் போன்று', அவர்கள் மீது திணிக்கப்பட்டுள்ள அதீத கற்றல் சுமையும் ஒரு காரணம் என்றால் அதை திட்டவட்டமாக மறுத்துவிட முடியாது.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

நமக்கான எல்லா வாய்ப்புகளும் நம்மைச் சுற்றியே உள்ளன, சில நேரங்களில் அவற்றை நாம் சரியாக அங்கீகரிப்பதில்லை.

– லூ ஹோல்ட்ச்



# பெப்ரவரி முதல் வாகன இறக்குமதி

**யாழ்ப்பாணம், டிசெ. 19**

**அடுத்த ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி முதல் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கா நாடாளுமன்றில் நேற்று தெரிவித்துள்ளார்.**

பெப்ரவரி முதலாம் திகதி முதல் தனிப்பட்ட பாவனைக்கான கார்களை இறக்குமதி செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இதனால் மீண்டும் டொலர் நெருக்கடியை சந்திக்க நேரிடும் என்பதில் சந்தேகம் வேண்டாம், எனினும் மத்திய வங்கியுடன் நீண்ட நாள்களாக விவாதித்து, வெளியேறும் டொலருக்கமைய இதைச் செய்கிறோம். 2028 ஆம் ஆண்டளவில் வெளிநாட்டு கையிருப்பை 15.1 பில்லியன் டொலராக அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ச-இ)

## அநுரவுக்கு ரணில் பாராட்டு

கொழும்பு, டிசெ. 19
இந்து - லங்கா ஒத்துழைப்பை மேலும் ஸ்திரப்படுத்தி வலுப்படுத்துவதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கூட்டு அறிவிப்பை வரவேற்பதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். அதேபோன்று எட்கா ஒப்பந்தத்துடன் முன்னோக்கி செல்வதற்கான தீர்மானம் தொடர்பிலும் ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு பாராட்டுகளையும் தெரிவித்தார். (ச-இ)

## கெஹலியவின் வங்கிக்கணக்கு முடக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 19
முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் நடைமுறை மற்றும் நிலையான வைப்புக் கணக்குகள் இரண்டையும் ஒரு வார காலத்துக்கு இடைநிறுத்துமாறு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.
இந்த இடைநீக்க உத்தரவை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய பின்னர் மேலும் நீடிக்க எதிர்பார்ப்பதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

## வர்த்தமானி வெளியீடு

வாகன இறக்குமதி தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கையொப்பத்துடன் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இது 2024 டிசெம்பர் 14 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறித்த வர்த்தமானியில் விடயதானங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ச)

## ரூபா வீழ்ச்சி

கொழும்பு, டிசெ. 19
அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணய மாற்று வீத அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பொருளாதாரம் ஏற்றம்

கொழும்பு, டிசெ. 19
2024ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் 5.5 வீத வளர்ச்சியை எட்டியுள்ளதாக சனத்தொகை மற்றும் புள்ளிவிவரங்கள் திணைக்கள அறிக்கை தெரிவித்துள்ளது. அதற்கமைய 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 2,987,544 மில்லியன் ரூபாவாக பதிவு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2024ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 3,151,941 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. (ச)

நாளை
வெள்ளிக்கிழமை - மார்கழி - 05
20.12.2024
சுபநேரம் : 06.24 - 07.54
ராகுகாலம் : 10.54 - 12.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடமாற்றங்களின்போது மனிதாபிமானம் தேவை

### யாழ். ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிச.19
ஆசிரியர்களின் இடமாற்றல்களை கல்வி அதிகாரிகள் மேற்கொள்ளும்போது மனிதாபிமானத்துடன் முறையாக மேற்கொள்ள வேண்டும் என்று வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்துக்கு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான சந்திரசேகரன் அறிவுறுத்தியுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு சென்றபோது அங்கே ஆசிரியர் பற்றாக்குறை, பல இடங்களில் பலவிதமான இடமாற்றங்கள் தொடர்பிலான குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன. உதாரணமாக வடமாகாணத்திலே 58 வயது மதிக்கத்தக்க அதிபர் ஒருவருக்கு அவருடைய மாவட்டத்திலேயே பதவிக்கான வெற்றிடம் காணப்படுகின்ற நிலையிலும் இரண்டு மாவட்டங்கள் கடந்து இடமாற்றல் வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியத்தை பெறுவதற்கு இரண்டு வருடங்களே இருக்கின்ற அவரை அவ்வாறு செய்ய வேண்டுமா? ஆகவே இவ்வாறான விடயங்கள் தொடர்பில் இடமாற்றல் சபை மற்றும் வடமாகாண கல்வித் திணைக்களம் மனிதாபிமானத்துடன் செயற்படுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (ச-125)

### பாதுகாப்பு அமைச்சின் கெடுபிடியால்

# இலங்கையர்களுடனான திருமணம்: கைவிடும் வெளிநாட்டுப் பிரஜைகள்!

### தமிழ் மக்களுக்கே அதிக பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 19

**சாதாரண ஒரு பிரஜை திருமணம் செய்து வெளிநாட்டுக்குச் செல்வதற்கு உரிமை உள்ளது. ஒருவர் தனது திருமணத்தினை நடத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி பெற வேண்டும் என்று எந்த நாட்டிலும் சட்டங்கள் இல்லை. எனவே இங்குள்ள கட்டுப்பாடுகளை உடனடியாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று இலங்கை பதிவாளர்கள் சங்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் வேலுப்பிள்ளை தவச்செல்வம் தெரிவித்துள்ளார்.**

யாழ். மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பதிவாளர் நாயகம் மற்றும் பதிவாளர்களுக்கிடையிலான சந்திப்பைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;
வெளிநாட்டுத் திருமணங்கள் பாதுகாப்பு அமைச்சின் கெடுபிடிகளால் இடைநிறுத்தப்படவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் தமிழ் மக்கள் அதிக பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர். வெளிநாட்டுத் திருமணம் ஒன்றை நடத்துவதற்கு குறைந்தது 14 நாள்கள் செல்லுகின்றன. குறிப்பாக பாதுகாப்பு அமைச்சிடம் சென்று அனுமதி பெற்று வருவதற்கு இவ்வாறான நாள்கள் வீண் விரயமாகின்றன. இதனால் நிச்சயிக்கப்பட்ட திருமணங்கள் இடைநிறுத்தப்படவேண்டிய சூழல் எழுகிறது.

இலங்கையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து ராஜபக்ச அரசாங்கத்தால் இந்தக் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டது. உண்மையில் பாதுகாப்பு அமைச்சுக்கும் வெளிநாட்டுத் திருமணத்துக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது.

ஒருவர் தனது திருமணத்தை நடத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி பெறவேண்டும் என்று எந்த நாட்டிலும் சட்டங்கள் இல்லை. ஆகவே இந்த முறைமை பதிவாளர் திணைக்களத்துக்கு மாற்றப்பட வேண்டும் குறைந்தது 7 நாள்களுக்குள் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கக் கூடியதாக அமைய வேண்டும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வசிப்பவர்கள் இந்த மாவட்டத்திலேயே இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடியதாக ஏற்பாடுகள் இடம்பெறவேண்டும் - என்றார். (ச-125)



# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 19
இலங்கை பதிவாளர் திணைக்களத்தின் பதிவாளர் நாயகத்துக்கும், யாழ். மாவட்டத்தின் பதிவாளர்களுக்குமிடையேயான கலந்துரையாடல், யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதன்போது யாழ். மாவட்ட பதிவாளர்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. கலந்துரையாடலில் பதிவாளர் நாயகம் டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க, வடக்கு வலயப் பதிவாளர் நாயகம், கிழக்கு வலயப் பதிவாளர் நாயகம், யாழ். மாவட்ட பதிவாளர்கள் கலந்து கொண்டனர். (ச-25,125,20)



# காணி உரித்துப் பதிவு யாழில் செயலமர்வு

யாழ்ப்பாணம், டிசெ.19
காணி உரித்துப் பதிவு தொடர்பான செயலமர்வு மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. செயலமர்வில் சிறப்பு விருந்தினராக பதிவாளர் நாயகம் டபிள்யூ. ஆர். என். எஸ். விஜயசிங்க கலந்து கொண்டார். (ச- 45-66)



### வவுனியா

# சந்தை வீதியில் நடைபாதைகள்

வவுனியா, டிசெ.19
வவுனியா சந்தை சுற்றுவட்ட வீதியின் முகப்பு பகுதியில் நடைபாதை அமைக்கும் பணி நகர சபையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குறித்த பாதையின் இருபக்கமும் வியாபாரிகளால் ஆக்கிரமிக்கப்பட்டு சுகாதாரமற்ற வகையில் மரக்கறிகள் விற்பனை செய்யப்பட்டு வருவதால் அந்தப் பாதையில் வாகனநெரிசல் ஏற்பட்டுள்ளது. இதனைத் தடுக்கும் முகமாக வவுனியா நகரசபை அந்த வீதியின் முகப்புப் பகுதியில் நடைபாதை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. (ச-45-110)

# மணற்கொள்ளைகளைத் தடுக்க சோதனைச் சாவடிகள் வேண்டும்

### பருத்தித்துறை, மருதங்கேணி பிரதேச செயலர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.19
பருத்தித்துறை மற்றும் மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவுகளில் சட்டவிரோத மணற்கடத்தல் நடவடிக்கைகள் சடுதியாக அதிகரித்துள்ளன. எனவே சோதனைச் சாவடிகளை உடன் அமைத்து மணல் கடத்தலைத் தடுக்க வேண்டும் என இரு பிரதேச செயலகங்களினதும் பிரதேச செயலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றபோதே அவர்கள் குறித்த கோரிக்கையை முன் வைத்தனர்.

தற்சமயம் குறித்த சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டுள்ள நிலையிலேயே மீண்டும் மணல் அகழ்வுகள் சடுதியாக அதிகரித்துள்ளன. இதனைக் கருத்திற் கொண்டு சோதனைச் சாவடிகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறை பிரதேச செயலாளர் மற்றும் மருதங்கேணி பிரதேச செயலாளர் கோரிக்கை விடுத்தனர். (ச-125)

# ஈழ அகதிகளை மீட்கவேண்டும்

யாழ்ப்பாணம், டிசெ. 19
தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கையைச் சேர்ந்த அகதிகள் மீளவும் நாட்டுக்கு வரவேண்டும் என்பதே எங்களின் விருப்பம். அதற்குரிய திட்டங்களுக்கான ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யு.என்.எச்.சி.ஆர். அமைப்பின் தேசிய அலுவலகத் தலைவராகப் பணியாற்றிய சஞ்சிதா சத்தியமூர்த்தி, வடக்கு மாகாண ஆளுநரை, ஆளுநர் செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியபோதே இதனைக் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர்சாலை

## இ.போ.ச. – தனியார் சேவையில் முரண்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.19
இலங்கைப் போக்குவரத்துச்சபையின் காரைநகர் வழித்தட நடத்துநர் ஒருவர் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவித்து ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் காரைநகர் சிற்றூர்திச் சங்க தலைவர் உதயராசா தெரிவிக்கையில், பிரச்சினைகள் இருப்பின் சங்கத்துக்கு அறிவிக்கவேண்டுமே தவிர விவாதங்கள் மற்றும் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு முனையக்கூடாது. இது பொதுமக்களுக்கான சேவை எனத் தெரிவித்தார்.

இது குறித்து இ. போ. சபையின் காரைநகர் சாலை முகாமையாளரை தொடர்பு கொண்டு கேட்டபோது எமது பேருந்து வழிவிடாது சென்றமையினால் நடத்துநர் வாக்குவாதத்தில் ஈடுபட்டாரே தவிர தாக்கவில்லை என்று குறிப்பிட்டார். (ச-125)



வவுனியாவில் அவ்வப்போது கனமழை பெய்து வருவதுடன், காற்றும் வீசி வரும் நிலையில் கடந்த திங்கட்கிழமை வீசிய கடும் காற்றுக் காரணமாக வவுனியா புகையிரத நிலையம் முன்பாக நின்ற பழமைவாய்ந்த பெரிய மரம் ஒன்று முறிந்து விழுந்துள்ளது. இதனால் அந்தப் பகுதியில் உள்ள அரச விடுதி ஒன்றும் வர்த்தக நிலையமும் சேதமடைந்துள்ளன. (ச-22,18)

# பயிரழிவு நட்டஈடு பெற்றுத்தரப்படும்

### ரவிகரன் உறுதி

**வவுனியா, டிசெ.19**
**பயிரழிவுகளைச் சந்தித்த விவசாயிகளுக்கு நட்டஈடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடுவதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

வவுனியா வடக்கு பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் விவசாயத் தோட்டங்களை பார்வையிட்டபோதே அவர் இதனை தெரிவித்தார். விவசாயிகளின் நிதிச்செலவில் செய்கைபண்ணப்பட்ட பப்பாசிப் பயிர்ச் செய்கைகள் அண்மையில் பெய்த கனமழையினால், முழுமையாகவும், பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விரைவில் நிவாரணம் கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-25, 246)

## பரு.– மருதங்கேணி வீதியை புனரமைக்க வேண்டும்

*பிரதேச செயலாளர் கோரிக்கை*

யாழ்ப்பாணம், டிசெ.19
மருதங்கேணி - பருத்தித்துறை வீதியைப் புனரமைத்துத் தருமாறு மருதங்கேணி பிரதேச செயலாளர் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் சுட்டிக் காட்டினார்.

மருதங்கேணி - பருத்தித்துறை வரையிலான வீதி மிக மோசமான நிலையில் சேதமடைந்து காணப்படுகின்றது. அவசரமாக அம்புலன்ஸ் கூடச் செல்லமுடியாத நிலை தோன்றியுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு வீதிப் புனரமைப்பு தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். (ச-45-125)

## சுத்திகரிப்புப் பணியாளருக்கு பாதுகாப்புக் காலணிகள்

யாழ்ப்பாணம், டிசெ.19
யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் யாழ்ப்பாண மாநகர சபை சுத்திகரிப்பு உத்தியோகத்தர்கள் 44 பேருக்கான பாதுகாப்புக் காலணிகளும், 10 மேற்பார்வையாளர்களுக்கான பாதுகாப்புத் தலைக்கவசங்களும் கடந்த திங்கட்கிழமை வழங்கிவைக்கப்பட்டன.

லண்டனில் வசிக்கும் கனகசபாபதி விநாயகமூர்த்தியின் அன்பளிப்பில் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஊடாக இந்த உதவிப் பொருள்கள் கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், யாழ். மாநகரசபை ஆணையாளர், யாழ். மாநகரசபை பொறியியலாளர், யாழ். மாநகரசபை உத்தியோகத்தர்கள், கலைப்பீட மாணவர்கள், கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-45-125,27,66)



## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 19
இலங்கை அபிவிருத்தி அலுவலர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல், மத்திய பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சில் எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. நீண்டகாலமாக தீர்க்கப்படாத பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக இதன்போது ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 9)



## யானைகளாலும் அழிவுறும் பயிர்கள்

கொழும்பு, டிசெ.19
கல்மடுக் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பெரும்போகம் 70 நாள்கள் கடந்த நிலையில் நெற்பயிர்களைத் தொடர்ச்சியாக காட்டு யானைகள் இரவு வேளைகளில் புகுந்து நாசம் செய்கின்றன.

இதனால் நெற்செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

இதேவேளை சீரற்ற காலநிலையால் வெள்ளத்தில் மூழ்கி நெற்பயிர்கள் அழிவடையும் நிலையும் யானைகளும் புகுந்து துவம்சம் செய்வதால் வாழ்வாதார இழப்பைச் சந்திக்க நேரிடுகின்றது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரடியாக பார்வையிட்டு தீர்வை பெற்றுத்தர வேண்டுமென அந்தப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-45-113)

## விழிப்புணர்வுப் பயணம்

யாழ்ப்பாணம், டிசெ.19
இலங்கையில் முதன்முதலாக யாழ். மண்ணில் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வுப் பயணத்தை யாழ்.பல்கலைக்கழக சட்டப்பீடத்தின் இரண்டாம் வருட மாணவர்கள் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று ஆரம்பித்தனர்.

யாழிலுள்ள பிரதான சுற்றுச்சூழல் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி, அவற்றை நிவர்த்தி செய்யத் தேவையான சட்டங்களையும், சூழல் வளங்களின் நிலைபேண் அபிவிருத்தியை எவ்வாறு பேணமுடியும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தி இந்த விழிப்புணர்வுப் பயணம் மேலும் பல மாவட்டங்களை நோக்கி நகரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-45-125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
04 . 11 . 1970

உதிர்வு
18 . 12 . 2016



## நிரஞ்சலா ஜெகசோதி

ஆண்டு எட்டு கடந்தாலும்
அழியாது உங்கள் திருவுருவம்
எம் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
நம் கண்ணில் ஒளியாய் என்றும் இருப்பாய் அம்மா
மீளாத் துயில் கொண்டு எம்மை எல்லாம்
ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்ற எம் பாசமிகு குலவிளக்கே
கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்கி
உன்பாதம் துதிக்கின்றோம்.

இல: 40, சுவர்ணா வீதி,
கொழும்பு - 06
(CR/43905) J-1
குடும்பத்தினர்


## 350 பவுண்...

பிறப்பிக்கப்பட்டிருந்த பயணத்தடையின் அடிப்படையில் விமான நிலையப் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் இந்திக தலைமையிலான குழுவினரிடம் பாரப்படுத்தப்பட்ட நிலையில், சந்தேகநபரிடம் இருந்து 40 பவுண் நகைகள் மற்றும் மூன்றரை லட்சம் ரூபா பணம் என்பன மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர் நீதிமன்றத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், சந்தேகநபரிடம் இருந்து திருடப்பட்ட நகைகளைப் பெற்றுக்கொண்ட இருவரும் கைதுசெய்யப்பட்டு அவர்களும் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களின் பிள்ளைகள் (பிரதான சந்தேகநபர் மற்றும் இரண்டாவது சந்தேகநபரான அவருடைய மனைவியின் பிள்ளைகள்) சிறுவர் காப்பகம் ஒன்றில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(அ-ம-26)

## புகலிடக்...

திணைக்களத்தால் விசாரணைக்கு அழைக்கப்படுவதுபோன்று இந்தக் கடிதம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தமது முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட இருவரும் 28 மற்றும் 33 வயதுடையவர்கள். சந்தேகநபர்கள் நீதிமன்றத் தில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவர்களை எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்களுக்காக இதுபோன்று பாரதூரமான குற்றச்செயல்களில் எவரும் ஈடுபட வேண்டாம் என்று பொலிஸார் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளனர். (அ-ம-19)

## பயங்கரவாதத்...

தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் ஊடாகக் கேட்டுப்பெற்ற தகவல்களின் அடிப்படையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களைவிட, 34 பேர் வழக்குத் தொடரப்படாமல் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை வழக்குத் தொடரப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 49ஆகவும், 2020 - 2023ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் முழுமையாக விடுவிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 81ஆகவும் காணப்படுகின்றது.

அதேபோன்று உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல்களுடன் தொடர்புடைய குற்றங்களுக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைவிட, 34 பேர் வழக்குத் தொடரப்படாமல் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு 54 பேர் வழக்குத் தொடரப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். 2019-2023 வரையான காலப் பகுதியில் 365 பேர் முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளனர்.

(அ-ம-இ)


### வீடு வாடகைக்கு தேவை

மூன்று பேர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.

077 95 95 930

### நல்ல நிலையில் உள்ள பாவித்த தளபாடங்கள் விற்பனைக்கு

- மர பெட்டகம் (முதிரை) 5'x3' 01 Nos
- இரண்டு வெளி யன்னல் கதவுடன் மகோகனி) 4'x3' 03 Nos
- கிணற்று மூடி (GI பைப்பிலானது) 8'x8' 01 Nos
- கதவுகள் (வேம்பு) 6'x3' 05 Nos

(CS/29469) J-1

தொடர்பு:- 077 498 0404
காலை 8 மணி - மாலை 6 மணி வரை



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
20 . 11 . 1966

மறைவு
01 . 01 . 2024



## முத்தையா இராமநாதன் (கண்ணன்)

திதி : தேய்பிறை பஞ்சமி (19.12.2024)

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஓராண்டு சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலடி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
(CS/56938) J-1
பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்



# ஓராண்டு நினைவஞ்சலி அழைப்பு



கடந்த 01.01.2024 திங்கட்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் ஜிவாகரன் உஷாஜினி


அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுநாள் நாளை (20.12.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் , அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

காளிகோவிலடி
[illegible] கொக்குவில்.
(CS/56833) J-1
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பாக்கிச் சூடு நடத்தி

# மணல் கடத்திய டிப்பரை மடக்கிப் பிடித்த பொலிஸ்



**யாழ்ப்பாணம், டிசெ. 19**

**மணல் கடத்தலில் ஈடுபட்ட டிப்பர் வாகனம், பொலிஸாரால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுக் கைப்பற்றப்பட்டுள்ளது.**

வடமராட்சி வல்லிபுரம் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. டிப்பரை நிறுத்துமாறு பொலிஸார் அறிவுறுத்திய போதிலும், தப்பியோட முற்பட்ட நிலையிலேயே, பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தி டிப்பரைக் கைப்பற்றியுள்ளனர். சந்தேகநபர்கள் தப்பிச்சென்ற நிலையில், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-100)

## சீரற்ற காலநிலை காரணமாக 3,507 கால்நடைகள் இறப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 19

வடமாகாணத்தில் அண்மையில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக 3 ஆயிரத்து 507 கால்நடைகள் உயிரிழந்துள்ளன என்று வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் மருத்துவர் வசீகரன் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த 3 ஆயிரத்து 507 கால்நடைகளில் 556 பசுமாடுகளும், 398 ஆடுகளும், 2 ஆயிரத்து 549 கோழிகளும், 4 எருமைகளும் உள்ளடங்குகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-125)

## வடக்கின் நீரியல் திட்டமிடல் காரைநகரில் நேற்று ஆரம்பம்


யாழ்ப்பாணம், டிசெ. 19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் WASPAR செயற்றிட்டம் முன்னெடுத்துள்ள மூன்று நாள் பயிற்சி முகாமின் முதலாம் நாள் நிகழ்வுகள் காரைநகர் கமநல சேவை மையத்தில் நேற்று இடம்பெற்றுள்ளன.

இந்தியாவின் குஜராத் மாநிலத்திலிருந்து இந்தப் பயிற்சியை வழங்குவதற்காக வருகைதந்துள்ள நீரியல் புவிச்சரிதவியல் நிபுணர் யோகேஷ் ஜடேஜா செற்றிட்டத்தை முன்னெடுத்தார். அத்துடன் அவர், வடஇந்திய மண்ணில் புதிய அணுகுமுறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் சமூகமட்டச் செயற்பாட்டாளர்கள் பயிற்றப்படுகின்ற ஒரு அணுகுமுறையை வடமாகாணத்தவருக்கு உகந்த முறையில் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

அந்த அணுகுமுறை நிகழ்வில் அறிமுகம் செய்யப்பட்டது. இதன்படி, அடுத்த தசாப்தத்தில் வடமாகாணத்தின் நீர்வளத்தை பாதுகாப்பாக நிலைபேறான வகையில் எடுத்துச் செல்ல தேவைப்படுகின்ற 'நீர்ப்பாது காவலர்கள்' என அழைக்கப்படக்கூடிய தொழில்நுட்பம் தெரிந்த சமூக ஆர்வலர்களை பற்றிய உரையாடல் நிகழ்வில் முன்னெடுக்கப்பட்டது.

இன்று அளவெட்டியிலும், நாளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும் அடுத்தகட்ட உரையாடல் நிகழவுள்ளது. (ம)



## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த கடலட்டைகள் பறிமுதல் !

இந்தியா,டிசெ.19

இராமநாதபுரம் மண்டபம் பகுதியிலுள்ள வீடொன்றில் இலங்கைக்கு கடல் வழியாக கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த இந்திய மதிப்பில் 50 இலட்சம் மதிப்பிலான 450 கிலோ பதப்படுத்தப்பட்ட கடலட்டைகள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மண்டபம் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (ச-22,56)

## கலாநிதிப் பட்டத்தை ஆற்றில் வீசிய மேர்வின்

கொழும்பு, டிசெ.19

அனைவருக்கும்தற்போதுபணத்துக்குப்பட்டம்வழங்கப்படுவதால் எனக்கு வழங்கப்பட்ட கலாநிதிப் பட்டத்தை ஆற்றில் வீசிவிட்டேன் என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

தற்போதுகரப்பான்பூச்சி, பல்லிஎன்பவற்றுக்குமட்டும்தான் பட்டம் வழங்கப்படாமல் உள்ளது. போலிக் கல்வித்தகைமைகளைக்காண்பித்துநாடாளுமன்றத்துக்குத் தெரிவான அனைவரையும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பதவி நீக்கவேண்டும். அப்போதுதான் அவரது பெயர் வரலாற்றில் இடம்பெறும். அவ்வாறு இல்லாவிட்டால் மக்களின் செல்வாக்கை அநுர இழக்க நேரிடும் என்றும் குறிப்பிட்டார். (ச-45-44)

## 13ஆவது திருத்தம் தொடர்பில் சிந்திக்க வேண்டும் ஜனாதிபதி

### ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவிப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க 13 ஆவது திருத்தம் தொடர்பில் சிந்திக்க வேண்டுமென, இந்தியாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவரும் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியில் பாதுகாப்புச் செயலராகக் கடமையாற்றியவருமான ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1986ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னரே ஜே. ஆர். இந்தியாவுக்கு விஜயம்மேற்கொண்டபோது இந்திய இராணுவத்தை அனுப்புமாறு கோரியிருந்தார். இந்த விடயத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா யாழ்ப்பாண மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளார். எனவே, 13ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி சிந்திக்க வேண்டும். 13ஆவது திருத்தம் 1987ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. இப்போது 37 ஆண்டுகள் கழிந்து விட்டன. நிலைமை மாறிவிட்டது அதை நாங்கள் கருத்தில்கொள்ள வேண்டும் - என்றார். (ம-6)

## சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 19

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், தூக்கிலிருந்து இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நீண்டநேரமாக அவரைக் காணவில்லை என்று அவரின் உறவினர்கள் தேடிய நிலையிலேயே, தூக்கிலிருந்து சடலமாக அவர் மீட்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-26)

பருத்தித்துறை மருத்துவமனையில்

## எலிக்காய்ச்சல் பரவல் காரணமாக மேலதிக விடுதி நேற்றுத் திறப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 19

யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் எலிக் காய்ச்சல் பரவி வரும் நிலையில், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் தனியான விடுதியொன்று திறக்கப்பட்டுள்ளது.

அண்மை நாள்களாக வடமராட்சி பிரதேசத்தில் அதிகளவானோர் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டு வரும் நிலையில் தினமும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்படுபவர்களது எண்ணிக்கையும் அதிகரித்தவண்ணம் உள்ளது. இதையடுத்தே தனியான விடுதி திறக்கப்பட்டுள்ளது. (ம-125-100-26)

## வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் தகவலறியும் படிவங்கள் இல்லை

யாழ்ப்பாணம், டிசெ. 19

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் படிவங்கள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில தகவல்களைப் பெறுவதற்காக தகவலறியும் படிவங்களை ஊடகவியலாளர்கள் கோரியபோதே, 'அந்தப் படிவங்கள் இல்லை' என்று ஊடகவியலாளர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையத் தளத்தில் படிவங்கள் தரவிறக்கம் செய்யக்கூடிய வகையில் உள்ளதால், அவற்றைத் தாம் வழங்குவதில்லை என்று ஆளுநர் அலுவலக அதிகாரிகள் மேலும் கூறியுள்ளனர். (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பல்கலைகளிடையே மேசைப்பந்துப் போட்டி

யாழ்ப்பாணம், டிசெ. 19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொன்விழா நிகழ்வுகளின் வரிசையில் இலங்கையிலுள்ள அனைத்து அரச பல்கலைக் கழகங்களுக்கும் இடையில் நடத்தப்பட்ட மேசைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களில் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

ஆண்கள் பிரிவில், மொரட்டுவ பல்கலைக்கழகம் சம்பியனை தனதாக்கிக் கொண்டது. ஸ்ரீஜெயவர்த்தனபுர, களனிப் பல்கலைக்கழகங்களின் அணிகள் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களைத் தமதாக்கிக் கொண்டன.

பெண்கள் பிரிவில், ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அணி சம்பியன் பட்டத்தைத் தன்தாக்கிக் கொண்டது. மொரட்டுவ, கொழும்பு பல்கலைக்கழகங்களின் அணிகள் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களைத் தமதாக்கிக் கொண்டன. (ச-22,20)



# மன்னார் மாவட்டத்தில் மறைக்கல்விப் பரீட்சை!

மன்னார், டிசெ. 19

மன்னார், வவுனியா மாவட்டங்களின் நிர்வாகத்திற்குள் உள்ளடக்கப்பட்டுள்ள மன்னார் மறைமாவட்ட மாணவர்களுக்கான வருடாந்த மறைக்கல்விப் பரீட்சை ஐந்து வருடங்களின் பின் இந்த வருடம் நடைபெற்றது.

மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி நடு நிலையத்தின் இயக்குநர் அருட்பணி அந்தோனி மரியதாசன் குரூஸ் (றொக்சன்) அடிகளாரின் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தப் பரீட்சை இடம்பெற்றது. (ச-22,60)




# சர்வதேச மனக்கணிதப்போட்டி மன்னார் மாணவர்கள் சாதனை

மன்னார், டிசெ.19

இந்தியா புதுடில்லியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற யூசி மாஸ் சர்வதேச மட்ட மனக்கணிதப் போட்டியில் இலங்கையிலிருந்து கலந்துகொண்ட 103 மாணவர்களில் மன்னார் யூசி மாஸ் கல்வி நிறுவனத்திலிருந்து 6 மாணவர்களும் பங்குபற்றி வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றுள்ளனர்.

ரா.ரியானா, ஜக்கேயு றெறா ஜெசாறி ஆகியோர் இரண்டாம் இடத்தையும், கு. ஆருஷன், செலமியா தேசுரா வின்சன்ட் ஆகியோர் மூன்றாம் இடத்தையும் வின்சன்ட் செஸான் ஜெத்னியல், செல்வக்குமரன் மேரி எய்மீ ஆகியோர் 4 ஆம் இடத்தையும் பெற்று வெற்றிக் கிண்ணங்களை சுவீகரித்துள்ளனர். (ச-25, 56)



கோண்டாவிலைச் சேர்ந்த புலம்பெயர்ந்து தற்போது கனடாவில் வாழ்ந்துவரும் பவீனா சிவகுமாரின் 21 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு கோண்டாவில் கிழக்கு சிறி அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும், குமரன் விளையாட்டுக்கழகத்தினதும் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தினூடாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனை நிர்வாகத்தினரிடம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஒருதொகுதி அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ச-33-66)

# எலிக்காய்ச்சல் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், டிசெ. 19

வடமராட்சிப் பிரதேசம் உள்ளிட்ட யாழ். குடாநாட்டில் எலிக்காய்ச்சல் அபாயம் தீவிரம் பெற்று வரும் நிலையில் கள உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு கலந்துரையாடல் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதன்போது நோய் பரவாமல் மேற்கொள்ள வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் குறித்த விடயம் தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அனைத்துத் தரப்பினரும் தமது ஒத்துழைப்பினை வழங்குவதாகவும் தெரிவித்திருந்தனர். (ச-22,100)



# மதிப்பளிப்பு

புத்த சாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில், கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் "கலாபூஷணம்" விருது பெற்ற பளை தர்மக்கேணியைச் சேர்ந்த மூத்த கலைஞர் செல்லையா சுந்தரம்பிள்ளை, பளை பிரதேச செயலகத்தினால் அண்மையில் மதிப்பளிக்கப்பட்டார். (ச-25, 9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு
## பொது அறிவித்தல் - 2025

1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் கரைதுறைப்பற்று பிரதேசசபை எல்லைக்குள் வசிக்கும் சகல பொதுமக்கள் மற்றும் தொழில் நிறுவன உரிமையாளர்கள் சபையினால் வழங்கப்படும் கீழ்வரும் உரிம அனுமதி மற்றும் சேவைகளுக்கான அனுமதிகளை பிரதேசசபை சட்ட ஏற்பாடுகள், சபைத்தீர்மானங்களிற்கு அமைவாக பெற்று நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் குறித்த நடைமுறைகளை பின்பற்ற தவறுவோர் மீது பிரதேசசபை சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**1) வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2025**
சபை எல்லைக்குள் வியாபார, தொழில் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் சகலரும் 2025 ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரத்தை 2025.03.31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ள வேண்டும்..

**2) சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் - 2025**
1533/16 ஆம் இலக்க 2008.01.25 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் விதந்துரைக்கப்பட்ட தொழில்களை அல்லது வியாபாரத்தை மேற்கொள்பவர்கள் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அல்லது ஏற்கனவே சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றவர்கள் உரிமம் காலாவதியாகும் திகதிக்கு மூன்று மாதத்திற்கு முன் விண்ணப்பித்து புதுப்பித்துக்கொள்ளுதல் வேண்டும்.

**3) கட்டடங்கள் அமைத்தல், விரிவாக்கம் செய்தல், புதுப்பித்தல், திருத்துதல் கட்டணங்கள் அறவிடல் - 2025**
i) கரைதுறைப்பற்று பிரதேசசபை எல்லைக்குள் புதிய கட்டடங்கள் அமைத்தல், எல்லைச்சுவர் அமைத்தல், கொங்கிறீட் தூண் இட்டு முட்கம்பி வேலி அமைத்தல், மலசலகூடம் அமைத்தல், கிணறுகள், குழாய்க் கிணறுகள் அமைத்தல், கட்டடங்கள் விரிவாக்கல், திருத்துதல், புதுப்பித்தல் என்பன பிரதேசசபையின் முன் அனுமதி பெற்று செயற்பட வேண்டும். சபையின் அனுமதி பெறப்படாது அமைக்கப்பட்ட கட்டுமானங்கள் எதுவாகினும் அனுமதியற்ற கட்டடங்களாக கருதி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் அல்லது நட்டஈடின்றி அகற்றப்படும்.

ii) கட்டட அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டு ஒரு வருடத்திற்குள் கட்டி முடிக்கப்படாத கட்டடங்கள் தொடர்பா காலநீடிப்பு அனுமதி பெறறுக்கொள்ளப்பட வேண்டும்.

iii) அனுமதி பெற்று அமைக்கப்பட்ட கட்டடம் தொடர்பாக சபைக்கு அறியத்தந்து உரிய கட்டட அமைவுச்சான்றிதழை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**4) துவிச்சக்கரவண்டி உரிமம், மிருக வரி உரிமம் பெற்றுக்கொள்ளல் - 2025**
2025 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி, மிருக வரி உரிமங்களை 2025.03.31 ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**5) விளம்பரங்களை காட்சிப்படுத்தல்**
சபையின் நிர்வாக எல்லைக்குள் வீதிகளின் இரு மருங்காகவும், வீதிக்கு மேலாகவும் வர்த்தக மற்றும் சேவை நிலையங்களிலும் காட்சிப்படுத்தப்படவுள்ள விளம்பரங்களிற்கு பிரதேசசபையில் கட்டணம் செலுத்தி அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அனுமதியை பெற்றுக்கொள்ளாத வர்த்தக நிலைய உரிமையாளர்கள் / நிறுவனங்கள்/ முகவர் நிறுவனங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு சகல விளம்பரங்களும் அகற்றப்படும்.

**6) முச்சக்கரவண்டி தரிப்பிடம்**
சபையின் எல்லைக்குள் முச்சக்கரவண்டி சேவையை வழங்குபவர்கள் அதற்கென சபையால் ஒதுக்கப்பட்ட முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் தரித்து நின்று சேவையை வழங்குவதுடன் பிரதேசசபையில் உரிய கட்டணத்தை செலுத்தி பதிவு செய்யப்படவும் வேண்டும்.

**7) மரக்கறி, மீன், இறைச்சி விற்பனை தடைசெய்தல்**
கரைதுறைப்பற்று பிரதேசசபை எல்லைக்குள் உள்ள பொதுச் சந்தைகளிலிருந்து 1.5Km தூரத்திற்குள் வர்த்தக நிலையங்கள், பாதையோரங்கள் என்பவற்றில் மரக்கறி, மீன், கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி என்பன விற்பனை செய்வது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

**8) படவரைஞரைப் பதிவு செய்தல் / புதுப்பித்தல் - 2025**
2025 ஆம் ஆண்டுக்கு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் படவரைஞராகப் பதிவு செய்தவர்களும் 2025.01.31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவோ அல்லது புதுப்பித்துக்கொள்ளவோ முடியும். தவறின் குறிப்பிட்ட திகதியின் பின்னர் பதிவினை மேற்கொள்ள முடியாது. மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**9) பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல், கழிவுநீர் கால்வாயை தடைசெய்தல்.**
சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுப்பொருட்களை போடுதல், கழிவுநீர்க் கால்வாயை தடைசெய்தல் என்பன தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள், வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் கொள்கலனில் கழிவுப்பொருட்களை சேகரித்தும், மேலதிக கழிவுகளை அகற்றுவதற்கு எமது சபையின் உப அலுவலகங்களில் உரிய கட்டணத்தை செலுத்தி கழிவுகள் அகற்ற ஒத்துழைப்பதோடு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**10) பொது சுகாதாரம் பேணல்**
சபையின் எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொதுச் சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள்/ பராமரிப்பாளர்கள் பற்றைகளைத் துப்பரவு செய்து பொது சுகாதாரத்தை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**11) இந்து மயானங்களில் சடலங்களை எரியூட்டுவதற்கு அல்லது புதைப்பதற்கு கட்டணம் அறவிடப்படும்.**
இந்து மயானங்களில் சடலங்களை எரியூட்டுவதற்கு அல்லது புதைப்பதற்கு கட்டணமாக ரூபா 1000.00 அறவிடப்படும். இக்கட்டணத்தை அப்பிரதேசத்திற்குரிய சனசமூக நிலையத்திடம் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்வதுடன் உரிய அனுமதியினை பெற்றுக்கொள்ள முடியும்.
அனுமதிக்காக இறப்பு தொடர்பாக கிராம சேவகர் அல்லது வைத்திய அதிகாரியின் கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.

**12) வீதி ஓரங்களில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குதல் தொடர்பாக**
சபைக்கு சொந்தமான வீதிகள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் ஏனைய திணைக்களங்களின் பரிபாலனத்துக்குட்பட்ட வீதிகளில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குகின்ற தனியார் நிறுவனங்கள் பிரதேசசபையில் முறைப்படி அனுமதி பெற்ற பின்பே தமது சேவையை ஆரம்பித்தல் வேண்டும்.

**13) கட்டாக்காலி விலங்குகள் தொடர்பானது**
சபை எல்லைக்குள், வீதிகளில் கட்டாக்காலியாகத் திரியும் விலங்குகள் பிரதேசசபையால் பிடிக்கப்பட்டு உரிமை கோரும் பட்சத்தில் தண்டம் மற்றும் பராமரிப்புச் செலவுடன் மீள வழங்கப்படுவதுடன், உரிமை கோராத பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

**பிரதேச சபையால் வழங்கப்படும் சேவைகள்**
**1) குடிநீர் வழங்கல் சேவை**
எமது பிரதேசசபைக்குட்பட்ட பொது மக்களிற்கான குடிநீர் விநியோகம் ஒரு லீற்றர் ரூபா 1.50 என்ற கட்டண அடிப்படையில் பிரதேசசபையின் அந்தந்த பிரிவு உப அலுவலகங்களில் செலுத்துவதன் மூலம் சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**2) கனரக வாகன சேவைகள்**
பக்கோ போன்ற கனரக வாகன சேவைகளை பெறுவதற்கு தலைமைக்காரியாலயத்தில் குறித்த சேவைக்கான கட்டணங்களை அலுவலக நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரை பணமாக செலுத்தி வாகன சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

**3) கலிபௌசர் வாகனசேவை**
கலிபௌசர் கழிவகற்றல் சேவைகளிற்கான கட்டணங்களை அந்தந்த உப அலுவலகங்களில் அலுவலக நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரை பணமாக செலுத்தி வாகன சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

**இராசயோகினி ஜெயக்குமார்,**
**செயலாளர்,**
**கரைதுறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு.**
19.12.2024.
(CS/43918) N-1

## ஆண் வேலையாள் தேவை

தங்கியிருந்து தோட்ட வேலை செய்வதற்கு 45 - 50 வயதிற்கிடைப்பட்ட ஆண் வேலையாள் தேவை.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்

**077 344 5721**

## அறைகள் வாடகைக்கு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அருகாமையில் அறைகள் வாடகைக்குண்டு.

**074 286 4786**
(CS/56957) N-1

## வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.
மேலும் கணினி அனுபவம் உள்ள பில் கிளாக், ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.

**தொடர்பு: 0777 488 093**
**0212 229 286**
(CR 43922) A-1

## DISTRICT SECRETARIAT, JAFFNA
## INVITATION FOR BIDS-(IFB-06)

Department Procurement Committee of Jaffna District Secretariat Called bids by **IFB 06 for Procurement of Services**. Please see the above mentioned Invitztion for Bids (IFB-06) in **Daily News dated 17.12.2024** or on Jaffna District Secretariat **website www.jaffna.gov.lk**

**Chairman,**
**Department Procurement Committee,**
**District Secretariat, Jaffna**

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 03 . 1943



மறைவு 18 . 12 . 2024

### செல்வி தம்பையா இராசலட்சுமி

பெரிய விளானைப் பிறப்பிடமாகவும், ஓடக்கரைவீதி சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி தம்பையா இராசலட்சுமி நேற்று (18.12.2024) புதன்கிழமை காலமானார்.
அன்னார் தம்பையா-தங்கம்மா தம்பதியின் அன்பு மகளும் செல்வநாயகி, காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், அரியநாயகம் மற்றும் ஞானலக்சுமி காலஞ்சென்ற சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.
அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (19.12.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்பு :-
**077 978 9832**
**077 242 5223**

தகவல்:
**சந்திரன் குடும்பத்தினர்.**
(CS 29471) V-1



## ஜனாதிபதி அநுரகுமார விரைவில் சீனா பயணம்

கொழும்பு, டிசெ. 20
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விரைவில் சீனாவுக்குச் செல்லவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சர் விஜத ஹேரத் தெரிவித்துள்ளார்.
அண்மையில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அநுர, அனேகமாக அடுத்த மாதம் மத்திய பகுதிக்கு முன்னர் சீனாவுக்குப் பயணம்மேற்கொள்ளவுள்ளார் என்றும், அங்கு உயர்மட்டத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் என்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கூறியுள்ளார்.
ஜனாதிபதியின் சீனப் பயணத்தின்போது, கடல்சார் ஆய்வுப் பணிகள், இருதரப்பு வர்த்தகம், பெற்றோலியம் உள்ளிட்ட துறைகளில் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் புதிய உடன்பாடுகள் எட்டப்படலாம் என்று கருதப்படுகின்றது.
தனது சீனப் பயணத்தை ஜனாதிபதி அநுரகுமாரவும் உறுதிப்படுத்தியுள்ளார். சீனாவின் அரசியல் ஆலோசனைக் குழுவினரை, நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுச் சந்தித்த ஜனாதிபதி, தனது சீனப் பயணத்துக்கான ஏற்பாடுகள் முழுமை செய்யப்பட்டுள்ளதாக சீனப் பிரதிநிதிகளிடம் கூறியுள்ளார்.
அத்துடன், இலங்கைக்கு வழங்கும் உதவிக்காக சீனப் பிரதிநிதிகளுக்கு தனது விசேடமான நன்றிகளையும் ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார்.
(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
15 . 01 . 1966



மறைவு
18 . 12 . 2024

## பாலசிங்கம் ஸ்ரீபாஸ்கரன்

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி பத்தமேனியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் ஸ்ரீபாஸ்கரன் அவர்கள் நேற்று (18.12.2024) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம் - அம்பிகாவதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான துரையப்பா - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற உதயதாரகையின் அன்புக் கணவரும், நிதர்சன், தர்மிலன், பானுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரர் ஸ்ரீபாஸ்கரி மற்றும் நந்தகோபால், நந்தரூபி, அனுசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிருஸ்ணலிங்கம், லிங்கேஸ்வரி, ஜெயசோதிலிங்கம், குண சோதிலிங்கம், கமலேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான பரசோதிலிங்கம், கோமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2024) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தீர்த்தாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விமான நிலைய வீதி,
பத்தமேனி, அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 834 8703

(CR 43924) A-1

# பன்னிரண்டாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 08.03.1949 — மறைவு 30.12.2012

அமரர்

## உயர்திரு நடராசா முருகதாசன்

(உரிமையாளர் - விநாயகர் ஸ்ரோர்ஸ் - கைதடிச்சந்தி)

நாட்களும், வாரங்களும், மாதங்களும் தான் அவை
கடந்திட வருடங்களோ பன்னிரண்டாகிவிட்டதே!
மனிதருள் மாணிக்கமாய் பண்பு நிறைந்த பேரொளியாய்
பக்குவமாய் பேசி அன்பால் அரவணைத்த தந்தையே

எம் வாழ்வின் ஒளி விளக்காய் திகழ்ந்து
எம்மை நல்லவழி நடத்தி வையத்துள்
வாழ்வாங்கு வாழ்ந்து அன்பு வழிகாட்டி
ஆதரவு தந்து இன்பமுடன் வாழ வைத்த தந்தையே

நீண்டு செல்லும் நாட்கள் அனைத்தும்
வானுறையும் தெய்வமாகிவிட்ட உம்மை
எம் நெஞ்சினில் நிறுத்தி நித்தமும் நினைத்திடுவோம் நாம் ....
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!


என்றும் உங்கள் நினைவுகளுடன்வாழும்
கைதடி கிழக்கு, கைதடி. (CS/2060) J-1 குடும்பத்தினர்

## ஒளிவிழா

தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன் புரி சங்கத்தின் ஏற்பாட்டில், ஒளிவிழா நிகழ்வு பிரதேச செயலக மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நடைபெறும். சங்கத் தலைவர் க. அருட்செல்வன் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் வண.போதகர் ராஜ்குமார் அடிகள், சாவகச்சேரி கச்சாய் வீதி புனித லிகோரியார் ஆலய பங்குத் தந்தை அருட்பணி ம. ஞானேந்திரன் ஆகியோர் கலந்துகொள்வர். அல்லாரை செபமாலை ஆலயம் மற்றும் சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயத்தை சேர்தவர்களின் குழு நடனம் இடம்பெறும். (ச-25-9)

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னம்பலம் தங்கம்மா



பிறப்பு 26.05.1931 — இறப்பு 17.12.2024

யாழ். அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் தங்கம்மா நேற்று முன்தினம் (17.12.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், முருகேசு-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முருகேசு பொன்னம்பலம் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற கனகலட்சுமி, மகாலட்சுமி, அமிர்தலிங்கம், காலஞ்சென்ற விஜயலட்சுமி, நிர்மலாதேவி (ஓய்வு பெற்ற ஆசிரியை, யா/ குளமங்கால் றோ.க. வித்தியாலயம்), மகாலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற கந்தசாமி, சண்முகராசா, சுசீலாதேவி, காலஞ்சென்ற சிவராசா, அருமைநாதன் (ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/ ஏழாலை சிறீமுருகன் வித்தியாலயம்), வாசுகி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற அழகரத்தினம், சரஸ்வதி, காலஞ்சென்ற முருகையா, காலஞ்சென்ற கணேசமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற வைத்திலிங்கம், சின்னத்துரை, செல்லையா ஆகியோரின் மைத்துனியும் அகிலன், மணிவண்ணன் (ஆசிரியர், யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி), பார்த்தீபன், அனுசியா (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், தெல்லிப்பளை), அஜந்தா (பிரான்ஸ்), கஜபரன், தனுஜா, நாகசசி, நவநீதன், அமிர்தரூபி, அமிர்தகரன், சுகிர்தா, கோகிலா, காலஞ்சென்ற தர்மினி, றமா, காலஞ்சென்ற தர்சிகா, காலஞ்சென்ற கண்ணதாசன், சர்மிளா, ஆகண்யா (பிரான்ஸ்), சண்முகப்பிரியன், பவித்திரன் (சுவிஸ்), பவதா (சுவிஸ்), றுக்ஷா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சந்தோஷ், ஆருசன், ஆதர்ஷன்,அஸ்விதன், அறிவன், அபூர்வன், சாத்விகா, சறோன், சைந்தவி, சர்விக், சாத்விக், தேன்நிலவன், அகரன், பிரமீனா, ஸியானுசன், துளசிகா, நிதுசன், ஷகிசனா, கோவர்சன், கேது, நிதுசன், கரணிகா, அய்ஷயா, அப்பிகா, ஜீவிதன், பிதுஜன், சாகித்தியன், ஜிசாளினி, வர்மிசன், அகிலயா, ஆருஸ், ஜனிஷ், றியா, அன்பன், ஆனந்தா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.12.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அளவெட்டி மல்லாகம் பொது இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :-
077 669 7214

(CS 29472) P-1

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில்
03-08-1939



விண்ணில்
15-12-2024

தென்மராட்சி மீசாலையைச்சேர்ந்த ஆசையம்மா, செல்லக்கா என்று எல்லோராலும் அழைக்கப்படும் சின்னப்பு செல்லம்மா அவர்கள் றொறன்ரோ கனடாவில் டிசெம்பர் 15ம் திகதி அதிகாலை 4:30 மணியளவில் இறைபதம் அடைந்துவிட்டார் என்பதை கனத்த இதயத்துடன் அறியத்தருகிறோம்.

அன்னார் காலம் சென்றவர்களான சின்னப்பு-வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் இளைய மகளும், காலஞ் சென்றவர்களான நல்லதம்பி, தாமோதரம்பிள்ளை, தங்கம்மா, நல்லம்மா, கிருஸ்ணசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலம் சென்றவர்களான ஏரம்பமூர்த்தி, பொன்னம்பலம் மற்றும் செல்லம்மா, யோகேஸ்வரி, தெய்வநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனியும்,

குமணன், பார்த்திபன், ஆதிரை, சுபத்திரை, ராதா, சீதா, சுதா, காலம்சென்ற பிறேமலதா, திலீபன், திவ்வியன், காலம்சென்ற சியாமளன் ஆகியோரின் ஆசை மாமியாரும் கிருஸ்ணகுமாரி, இளங்கோ, கீதவல்லி,புனிதகுமாரி, விமலகுமாரி, இளமுருகன், சிவசாரதா,சிவபாலன், பாலகணேசன், சிவபரன் ஆகியோரின் சிறிய தாயாரும்

ஜான்சிராணி, அஜோனா, சர்வேந்திரன், உதயகுமார், சந்திரமோகன், கண்ணன், சிறீதரன், ஜீவகன், வித்தியானந்தன், ஜெயலஷ்மி, ஈழநேசன், சிறீரவிகுலன், வனிதா, பிறேமினி, சுகன்யா, கோபிகா, ஆகியோரின் மாமியாரும்,

கீர்த்தனன், அஸ்வதி, பீஷ்மன், கெவின், பானுசன், பிருந்தாபன், கோபிகிருஸ்ணா, கௌசிகா, கோபிகா, சரணி, ஹரிணி, கவின்,ரஷ்மி, சாகரா, விரோசன், லத்திகா, சொரூபினி, பரதன், விசாகன், இராகவன், வானதி, ஆதவன், சேயோன், வித்தகி, கிரிபரன், ஜனார்த்தனன், பிரணவன், அக்சதன், ஆதித்தியன், காலம் சென்ற அகரன்மற்றும்ஆலோகன், எழினி, தமிழிசை, தமிழவள், வைனறி, ஏரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அரிஷனா, அகஸ்திகா, அக்ஷசித் ஆகியோரின் பூட்டியுமாவார்.


இவ்வறிவித்தலை உற்றார் உறவினருக்கு அறியத்தருகிறோம்.

**இறுதிக்கிரியைகள் விபரங்கள்**

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham , ON L3R 5G1 இல் சனி- 21-12-2024 றொரன்றோ நேரம்: மாலை 5:00 தொடக்கம் - மாலை 9:00 வரையும் மறுநாள் ஞாயிறு: 22-12- 2024 றொரன்றோ நேரம்: காலை 7:00 தொடக்கம் -காலை 8:00 வரை வைக்கப்பட்டு ஈமக்கிரிகைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.

தகவல்: குமணன் நல்லதம்பி +1 604 764 2306 Dr.ராதா சந்திரமோகன் 1 647 449 1708

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 19.11.2024 செவ்வாய்க்கிழமை அன்று
சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் திரு. அழகசுந்தரம் கிருபாகரன்

நாட்கள் பல கடந்து சென்றாலும்
ஆறவில்லை எங்கள் மனம் குடும்பம் என்ற கோயிலில்
குலவிளக்காக திகழ்ந்த எங்கள் தெய்வமே!
மாண்டாலும், மறையாது
உங்கள் நினைவு என்றென்றும்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (19.12.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் **துர்க்கா மணி மண்டபத்தில் (நல்லூர்)** நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

மலர்வு
03.06.1980

உதிர்வு
19.11.2024

077 722 5292

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறுவடை இயந்திரங்கள் மற்றும் அறுவடை இயந்திரங்கள் ஏற்றிச்செல்லும் டொக்கு ஆகியன ஏல விற்பனை

எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்திற்கு சொந்தமான தற்போது நல்ல நிலையில் உள்ளதும் உடன் பயன்படுத்தக் கூடியது மான G-68 வகை (குவாட்டா) G-70 வகை (குவாட்டா) ஆகிய இரண்டு அறுவடை இயந்திரங்கள் மற்றும் அறுவடை இயந்திரங் களை ஏற்றும் டொக்கு இரண்டும் தனித்தனியாக ஏலக் கூறல் மூலம் 29.12.2024 அன்று காலை 10மணிக்கு எமது சிறுவர் இல்ல பிரதான வளாகத்தில் விற்பனை செய்வதற்கு 15.12.2024 ம் திகதிய இல்ல முகாமைக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப இயந்திரத்தினை பெறவிரும்புவோர் குறித்த திகதியில் குறித்த நேரத்திற்கு வருகைதந்து ஏலக் கேள்வியினை கோரி பெற்றுக் கொள்ளமுடியும்

அத்தோடு இவற்றினை நேரில் பார்வையிடவிரும்புவோர் விற்பனை திகதிக்கு முன் வாரத்தில் 07 நாட்களும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 04 வரை பார்வையிடலாம் என்பதனை அறியத் தருகின்றோம்.

குறிப்பு : வெற்றிபெறும் ஏலதாரர் தாங்கள் ஏலக்கேள்விமூலம் கோரிய தொகையினை அன்றைய தினமே செலுத்தி உடன் இயந்திரங்களினை இல்ல வளாகத்திலிருந்து வெளிக்கொண்டு செல்லுதல் வேண்டும் என்பதோடு குறித்த ஏல விற்பனை தொடர்பில் எமது ஏலவிற்பனைக்குழுவின் தீர்மானமே இறுதியானதாக இருக்கும் என்பதனையும் அறியத் தருகின்றோம்.

**ஏலவிற்பனை நடைபெறும் இடம்**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல பிரதான வளாகம்**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி**
**0214123118, 0773240950**

(CR/43920) J-1

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## Job Vacancy- Mechanic – Kilinochchi

The HALO Trust is the world's largest and oldest international humanitarian mine action non-government organization (NGO). For over thirty years, we have been saving lives and helping war-torn communities recover, by making their land safe. Our mission is to protect lives and restore the livelihoods of those affected by conflict. HALO has been working in Sri Lanka since 2002 and now has over 1,000 staff working in the Northern Province with offices in Jaffna, Kilinochchi and Mullaitivu.

We are seeking to recruit a Mechanic based in Kilinochchi. The purpose of this role is to be part of HALO's workshop team and ensure that the maximum number of programme vehicles are operational.

**Main Responsibilities:**
- Assist the Workshop Manager, Assistant Workshop Manager and Mechanic Level 4 with all daily workshop activities as assigned.
- Perform preventative maintenance on vehicles, mechanical plants, machinery, accessories, and components.
- Conduct breakdown and corrective maintenance on vehicles, machinery, and mechanical plants.
- Perform scheduled maintenance on vehicles, mechanical plants, and machinery as per the manufacturer's routine checks, replacements, and inspections.
- Carry out skilled work under close supervision for training purposes.
- Perform tasks assigned by supervisors, such as replacing defective parts.
- Ensure adherence to all workshop procedures and rules.
- Maintain a tidy, safe, and secure workshop, including tools, equipment, and spare parts stores.
- Carry out any other duties as specified by the Workshop Manager, Assistant Workshop Manager, or Mechanic Level 4.

**Requirements:**
- A valid driving license.
- Vocational training certificate or at least 5 years of relevant experience.

**Preferred Qualifications:**
- Proficiency in Tamil and/or English.

**Application Process:**
All applications must be submitted to the address below no later than 31 December 2024, either by post or via email. If enough qualified applicants are received, we reserve the right to close the application period earlier than the stated date. Only successful applicants will be contacted. For further information, please contact 021 228 5466.

**HR Manager**
**The HALO Trust,**
**450 Thirunagar West, Kilinochchi.**
**hr@halosrilanka.org**

(cr.43913) (N-1)

# ஆதன பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் - 03, மணல்தறை ஒழுங்கை 44/7C pt எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் என ஆதனவரிப் பதிவேட்டில்காணப்படுகின்றது.

இவ்வாதனத்தை யாழ்ப்பாணம் இல 6, முருகன் திருநெல்வேலி கிழக்கை சேர்ந்த தம்பர் வேலுப்பிள்ளை சிவலிங்கம் என்பவர் பிரசித்த நொத்தாரிசு K.M இராதாகிருஸ்ணன் முகதாவில் 2011.09.10 ம் திகதி 719 ம் இலக்கத்தில் உருத்து விளம்பல் நிறைவேற்றியுள்ளார்.

குறித்த ஆதனத்தினை யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கு இல 6, முருகன் வீதியை சேர்ந்தவர்களான தம்பர் வேலுப்பிள்ளை சிவலிங்கமும் பெண் மகேஸ்வரியும் 10.09.2011 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு K.M இராதாகிருஸ்ணன் முகதாவில் 720 ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் அவ்வூர் தமது மகள் சிவலிங்கம் மகள் நளினி என்பவருக்கு இதன் பின்வரும் ஆதன அட்டவணை 1ல் விபரிக்கப்படும் ஆதனத்தையும் 10.09.2011 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு K.M இராதாகிருஸ்ணன் முகதாவில் 721 ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் அவ்வூர் தமது மகள் சிவலிங்கம் மகள் லோகவதனி என்பவருக்கு இதன் பின்வரும் ஆதன அட்டவணை 2ல் விபரிக்கப்படும் ஆதனத்தையும் நன்கொடை வழங்கியுள்ளனர்.

இல 61-3/1,ஸ்கைலைன் வீட்டுத்திட்டம், 37ம் ஒழுங்கை, கொழும்பு 06 நளினி மதுசூதனன் விவாகத்திற்கு முன் சிவலிங்கம் மகள் நளினி இதன் பின்வரும் ஆதன அட்டவணை 1ல் விபரிக்கப்படும் ஆதனத்தை 26.07.2023 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு நளினி கணேசயோகன் முகதாவில் 5669 ம் இலக்கத்தில் காணி அளவு தொடர்பில் விளம்பல் உறுதி நிறைவேற்றியுள்ளார். மேலும் குறித்த விளம்பல் உறுதியில் யாழ். மாநகர சபை என்பதற்கு பதிலாக நல்லூர் பிரதேச சபை என குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த தவறானது பிரசித்த நொத்தாரிசு திருமதி சறோஜினிதேவி இளங்கோவன் முகதாவில் தனது அற்றோனித்தத்துவகாரர் துரைராஜசிங்கம் நாகேந்திரன் ஊடாக 28.08.2024 ம் திகதியிட்டு 20028 ம் இலக்கமிடப்பட்ட உறுதி மூலம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இல 33-2/1 சமர் எம்பயர்,பிரெட்ரிகா வீதி வெள்ளவத்தை கொழும்பு 06லோகவதனி ஐங்கரேசன் விவாகத்திற்கு முன் சிவலிங்கம் மகள் லோகவதனி இதன் பின்வரும் ஆதன அட்டவணை 2ல் விபரிக்கப்படும் ஆதனத்தை 26.07.2023 ம் திகியிட்டு பிரசித்த நொத்தாரிசு நளினி கணேசயோகன் முகதாவில் 5670 ம் இலக்க விளம்பல் உறுதி" நிறைவேற்றியுள்ளார்.மேலும் குறித்த விளம்பல் உறுதியில் யாழ் மாநகர சபை என்பதற்கு பதிலாக நல்லூர் பிரதேச சபை என குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த தவறானது பிரசித்த நொத்தாரிசு திருமதி சறோஜினிதேவி இளங்கோவன் முகதாவில் தனது அற்றோனித்தத்துவகாரர் துரைராஜசிங்கம் நாகேந்திரன் ஊடாக 28.08.2024 ம் திகதியிட்டு 20029 ம் இலக்கமிடப்பட்ட உறுதி மூலம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

### ஆதன அட்டவணை 01

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, நல்லூர் கோயிற்பற்று, நல்லூர் பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் மாநகரசபை, கிராம அலுவலர் பிரிவு J/103 கந்தர்மடம்,வடகிழக்கு, திருநெல்வேலி இறை **"இரட்டைப்பிராயடி"** இதன் விஸ்தீரணம் நிலப்பரப்பு ஏழும் (நில. பர 7) கிணறும் வான்பயிர் செய்பயிர்களும். இதில் மேற்குப்பக்கமாக நிலப்பரப்பு மூன்றரையும் (நில. பர 31/2) கிணறும் வான்பயிர் செய்பயிர்களும் இதற்கெல்லை கிழக்கு சிவலிங்கம் மகள் லோகவதனியின் ஆதனம், மேற்கு வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியத்தின் உரிமைக்காரரின் ஆதனம், வடக்கு சிவசுப்பிரமணியம் கைம்பெண் பூமணியின் ஆதனம், தெற்கு : மணற்தறை ஒழுங்கையும் இதடங்கலும். குறித்த இவ் ஆதனம் தற்காலம் உத்தரவுபெற்ற நில அளவையாளர் K.பரமேஸ்வரன் அவர்களால் 1793/2014ம் இலக்க 2014.05.23 ம் திகதி வரைபடத்தின் பிரகாரம் துண்டு 1 என விவரிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, நல்லூர் கோயிற்பற்று, நல்லூர் பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் மாநகரசபை, கிராம அலுவலர் பிரிவு J/103 கந்தர்மடம்,வடகிழக்கு, திருநெல்வேலி இறை "இரட்டைப் பிராயடி" இதன் விஸ்தீரணம் இரண்டு நிலப்பரப்பு பதின்மூன்று தசம் ஆறு நான்கு குளி (நில பர 2 குளி 13.64) கிணறும் வான்பயிர் செய்பயிர்களும், இதற்கெல்லை

கிழக்கு : குறித்த 1793/2014 இலக்கப்படத்தில் காட்டப்பட்ட துண்டு 2 தற்காலம் லோகவதனி ஐங்கரேசன் விவாகத்திற்கு முன் சிவலிங்கம் மகள் லோகவதனி ஆதனம்.
மேற்கு : பாலசுந்தரம் கமல்காந்தும் பெண் ஜெனித்தாவின் ஆதனம்.
வடக்கு : 12 அடி அகலப்பாதை.
தெற்கு : மணற்தறை ஒழுங்கையிலிருந்து புதிய சிவன் வீதிக்கான ஒழுங்கை.

### ஆதன அட்டவணை 02

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, நல்லூர்க் கோயிற்பற்று, நல்லூர் பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் மாநகரசபை, கிராம அலுவலர் பிரிவு J/103 கந்தர்மடம்,வடகிழக்கு, திருநெல்வேலி இறை.

**"இரட்டைப்பிராயடி"** இதன் விஸ்தீரணம் நிலப்பரப்பு ஏழும் (நில பர 7) வான்பயிர் செய்பயிர்களும் இதில் மேற்குப்பக்கமாக ஏற்கனவே நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட நிலப்பரப்பு மூன்றரை (நில. பர 31/2) நீக்கி மிகுதியில் கிழக்குப் பக்கமாக நிலப்பரப்பு மூன்றரையும் (நில. பர 3 1/2) வான்பயிர் செய் பயிர்களும் இதற்கெல்லை **கிழக்கு:** சேனத்துரை தவமலரின் உரிமைக்காரரின் ஆதனம், **மேற்கு :** சிவலிங்கம் மகள் நளினியின் ஆதனம், **வடக்கு:** சிவசுப்பிரமணியம் பெண் பூமணியின் ஆதனம், **தெற்கு :** மணற்தறை ஒழுங்கையும் இதடங்கலும். குறித்த இவ் ஆதனம் தற்காலம் உத்தரவுபெற்ற நில அளவையாளர் K.பரமேஸ்வரன் அவர்களால் 1793/2014 ம் இலக்க 2014.05.23 ம் திகதி வரைபடத்தின் பிரகாரம் துண்டு 2 என விவரிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, நல்லூர்க் கோயிற்பற்று, நல்லூர் பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் மாநகரசபை, கிராம அலுவலர் பிரிவு J/103 கந்தர்மடம் வடகிழக்கு, திருநெல்வேலி இறை.

"இரட்டைப்பிராயடி" இதன் விஸ்தீரணம் இரண்டு பரப்பு பதின்மூன்று தசம் ஆறு நான்கு குளி (நில பர 2 குளி 13.64) கிணறும் வான்பயிர் செய்பயிர்களும். இதற்கெல்லை

**கிழக்கு :** றொனால்ட் பெண் தனுசாவின் ஆதனம்
**மேற்கு :** குறித்த 1793/2014 இலக்கப்படத்தில் காட்டப்பட்ட துண்டு 1 தற்காலம் நளினி மதுசூதனன் விவாகத்திற்கு முன் சிவலிங்கம் மகள் நளினியின் ஆதனம்
**வடக்கு :** 12 அடி அகலப்பாதையும் குறித்த 1759/2014 இலக்கப்படத்தில் காட்டப்பட்ட துண்டு 3 சிவசுப்பிரமணியம் வகீதரனின் ஆதனம்
**தெற்கு :** மணற்தறை ஒழுங்கையிலிருந்து புதிய சிவன் வீதிக்கான ஒழுங்கை

தற்போது 44/7C ஆதனமானது உபபிரிவிடல் செய்யப்பட்டு 44/7E, 44/7G என இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளது. தற்போது 44/7E என் இலக்கமிடப்பட்ட ஆதனத்தினை **நளினி மதுசூதனன் விவாகத்திற்கு முன் சிவலிங்கம் மகள் நளினி** என்பவரும் 44/7G என இலக்கமிடப்பட்ட ஆதனத்தினை **லோகவதனி ஐங்கரேசன் விவாகத்திற்கு முன் சிவலிங்கம் மகள் லோகவதனி** என்பவரும் தமது பெயருக்கு எமது ஆதனவரிப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த 44/7E ம் இலக்க ஆதனத்தினை **நளினி மதுசூதனன் விவாகத்திற்கு முன் சிவலிங்கம் மகள் நளினி என்பவருக்கும்** 44/7G ம் இலக்க ஆதனத்தினை **லோகவதனி ஐங்கரேசன் விவாகத்திற்கு முன் சிவலிங்கம் மகள் லோகவதனி** என்பவர்கள் பெயருக்கும் பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாநகர ஆணையாளர்**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(CR/43916) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுரவால்...

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்ததாவது:-

“2022ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி போன்று மீண்டும் ஏற்பட எமது அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்காது என்பதை நான் தெளிவாகக் கூறிவைக்க விரும்புகின்றேன். 2028ஆம் ஆண்டுமுதல் நாம் கடனை மீளச்செலுத்தவேண்டும் என்றும், இதனால் நாடு நெருக்கடிக்குள் தள்ளப்படும் எனவும் சிலர் போலிப் பரப்புரைகளை அரசாங்கத்துக்கு எதிராக மேற்கொண்டு வருகின்றனர். 2028ஆம் ஆண்டிலும் நாம் தான் ஆட்சியில் இருப்போம். என்று அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். 12.5 பில்லியன் டொலர் பெறுமதியான சர்வதேசக் கடன் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இதில் 11.5 பில்லியன் டொலர் 2015 தொடக்கம் 2019ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் பெறப்பட்ட கடனாகும். எனவே, இப்போது ஆலோசனைகள் கூறுபவர்கள் ஏன் அப்போதைய அரசாங்கத்துக்குக் கூறவில்லை? என்று கேட்க விரும்புகின்றேன்.

2028ஆம் ஆண்டளவில் நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பை 15.1 பில்லியன் அமெரிக்க டொலராக உயர்த்துவது அரசாங்கத்தின் நோக்கமாகும். உழைக்கும் போது செலுத்தும் வரி விலக்கு வரம்பை ஒரு லட்சம் ரூபாவில் இருந்து ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் மூன்றாவது மீளாய்வு தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடலைத் தொடர்ந்து, வருமான வரி வரம்பை அதிகரிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

புதிய வரித் திருத்தங்களின் பிரகாரம் தனிநபர் வருமானமாக 5 லட்சம் ரூபா முதல் ஒரு மில்லியனைப் பெறுபவர் வரியின் முதல் கட்டத்தில் உள்ளடக்கப்படுவதுடன், அவர் 6 வீத வரி விதிப்புக்கு உட்படுவார்.

கடந்த காலத்தில் குறைவான வருமானம் பெறுபவர்களுக்கு அதிகமான வரியும் அதிக வருமானம் பெறுபவர்களுக்கு குறைவான வரியும் காணப்பட்டது. தற்போது, குறைவான வரி பெறுவோருக்கு குறைவான வரியும் அதிக வருமானம் பெறுபவர்களுக்கு அதிக வரியும் அறவிடும் முறை உருவாகியுள்ளது. சேவைகள் ஏற்றுமதிக்கான வரியை 30 வீதத்திலிருந்து 15 வீதமாகக் குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது” - என்றார். (அ-ம-இ)

## அவதூறு...

நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு நீதிமன்றம் கட்டாணை பிறப்பித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அர்ச்சுனா இராமநாதனிடம் 100 மில்லியன் ரூபா நஷ்ட ஈடு கோரி யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி யாழ். மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளார். இந்த வழக்கு நேற்றுப் புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்திக்கு எதிராகவும், அவருடைய மாண்பைச் சீர்குலைக்கும் வகையிலும் இராமநாதன் அர்ச்சுனா தொடர்ந்து செயற்பட்டு வருகின்றார் என்றும், தன்னுடைய பேஸ்புக்கில் வெளியிடும் வீடியோக்கள் ஊடாக அவதூறு தெரிவிக்கின்றார் என்றும் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. அர்ச்சுனாவால் கூறப்படும் கருத்துகளில் எந்தவிதமான உண்மையும் இல்லை என்பதோடு அடிப்படை அறமற்ற நபர் ஒருவருடைய கருத்தாகும் என்று வழக்காளி மருத்துவர் சத்தியமூர்த்தி தனது சத்தியக்கூற்றிலே தெரிவித்திருந்தமை தொடர்பில் சட்டத்தினையும், நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட தீர்ப்புகளையும் சுட்டிக்காட்டி நீண்ட சமர்ப்பணம் வழக்காளி தரப்பில் மன்றில் முன்வைக்கப்பட்டது.

மேலும் வழக்காளி தனது சத்தியக் கூற்றில், தனது நோக்கம் எதிராளியான இராமநாதன் அர்ச்சுனா நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் இலங்கையின் குடிமகன் என்ற வகையிலோ அல்லது பொது நிறுவனங்களை பொறுப்புக்கூற வைக்க வேண்டும் என்ற நியாயமாக செயற்படும் இடத்தோ, அவற்றுக்கு குந்தகம் விளைவிப்பது அல்ல. ஆனால், பொய்யான வகையிலும், அவதூறான வகையிலும் அவரால் முன்வைக்கப்படும் கருத்துகள் தொடர்பில் கட்டளையாக்கப்பட வேண்டும் என கோரப்பட்டிருந்தது.

குறித்த விடயங்களை செவிமடுத்த நீதிபதி வழக்காளியால் கோரப்பட்டவாறு, அவருக்கு எதிராக அவதூறான கருத்துகள் எதனையும் தெரிவிக்கக்கூடாது என எதிராளி இராமநாதன் அர்ச்சுனாவுக்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளார்.

இது ஒரு முகமாக வழக்காளி தரப்பை மட்டும் கேட்டு வழங்கப்படும் கட்டாணை என்பதால், இது தொடர்பான அறிவித்தல் எதிராளிக்கு வழங்கப்படவுள்ளது. கட்டாணை எதிர்வரும் 30ஆம் திகதி வரை வலிதாக இருக்கும். அன்றையதினம் அதனை நீடிப்பதா இல்லையா என்பது தொடர்பிலான தீர்மானத்தை நீதிபதி எடுப்பார். (அ-ம-26-20)

## காற்றின்...

டுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஊடகப் பேச்சாளர் அஜித் குணவர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“கொழும்பு, கண்டி, காலி மற்றும் வடமாகாணத்தில் காற்றின் தரம் சாதகமற்ற நிலையை எட்டியுள்ளது. சமீபத்திய மோசமான வானிலை காரணமாகவே, வடமாகாணத்தில் காற்றின் தரம் வீழ்ச்சியடைந்துள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஆரோக்கியமற்ற நிலைக்குச் சென்றுள்ளது” - என்றார்.

இதேவேளை - யாழ்ப்பாணப் பிரதேசத்தின் காற்றின் தரம் தொடர்பில் ஒருமாத காலத்துக்குத் தொடர்ச்சியான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும், தீங்கு விளைவிக்கும் பொருள்கள் உள்ளதா என நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

## வளித்தரக்...

காற்றின் தரம் தொடர்பில் ஆராயுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவைத் தொடர்ந்தே, அந்தக் கண்காணிப்பு நிலையத்தை இயங்கவைக்க மேற்படி குழுவினர் கொழும்பில் இருந்து வருகை தரவுள்ளனர். மத்திய சுற்றாடல் அதிகார சபையால் யாழ். மாவட்டத்தின் காற்றுத் தரம் தொடர்பில் ஆராய பருத்தித்துறை, யாழ். மாவட்ட செயலக வளாகம் மற்றும் யாழ்ப்பாணம் பழைய பூங்கா என மூன்று இடங்களில் காற்றின் தரத்தை அளவிடுகின்ற வளித்தர கணிப்பு நிலையம் அமைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

குறித்த நிலையங்களில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை காற்றின் தரம் குறித்து ஆராயப்படுகின்றது. இருந்தபோதிலும் சுமார் ஒரு மாத காலத்துக்கு மேலாக யாழ். பழைய பூங்காவில் அமைந்துள்ள வளித்தர நிர்ணய நிலையம் இடி வீழ்ந்து இயங்கவில்லை என மத்திய சுற்றாடல் அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. அந்தக் கட்டமைப்பின் பராமரிப்புப் பணிகளே இன்று மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

## ஜெகூவின்...

வடமாகாண மேல் நீதிமன்றின் யாழ்ப்பாணம் அமர்வில் உறுதிகேள் எழுத்தாணை மனு தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி மனு ஆதரிக்கப்பட்டு எதிர்மனுதாரர்களான வடக்கு மாகாண ஆளுநர், மாகாண ஆளுநரின் செயலாளர் மற்றும் பிரதம செயலாளர் ஆகியோருக்கு அறிவித்தல் சேர்ப்பிக்க கட்டளையிட்ட வடமாகாண மேல் நீதிமன்றின் யாழ்ப்பாணம் அமர்வு நீதிபதி கூசைதாசன், வழக்கை ஆட்சேபனைக்காக வரும் ஜனவரி 20ஆம் திகதிக்கு தவணையிட்டார்.

மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் கடமையாற்றிவந்த பராமரிப்புத் தொழிலாளிக்கும், எந்திரிக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பைத் தொடர்ந்து மூவர் கொண்ட ஆரம்ப விசாரணை நடத்தப்பட்டு, விசாரணை அறிக்கையின் பரிந்துரையின் பிரகாரம் இருவரையும் தற்காலிகமாக இடமாற்றம் செய்வதற்கு உத்தரவிடப்பட்டது. அந்த அறிக்கை மனுதாரருக்கு பாரப்படுத்தப்பட்டது.

ஆனால், இந்த இடமாற்றத்துக்கு எதிராக மன்னார் மேல்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், இடமாற்றம் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படக்கூடாது என்று மன்னார் மேல் நீதிமன்றத்தால் இடைக்காலக் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இது இவ்வாறிருக்கையில், கடந்த வருடம் நவம்பர் மாதம் 22ஆம் திகதி ஆளுநரின் செயலாளர் குறித்த இடமாற்றத்தை ரத்துச் செய்து, மன்னார் அலுவலகத்துக்கு அந்த இடமாற்றத்தைச் செயற்படுத்துமாறு மனுதாரருக்குப் பணித்துள்ளார்.

இதையடுத்து மனுதாரர் ஆளுநரை அவரது அலுவலகத்தில் சந்தித்து, நீதிமன்ற வழக்குத் தொடர்பில் சுட்டிக்காட்டியிருந்தார். இதன்போது, ஆளுநர் தனது செயலாளரின் பணிப்பின் பெயரில் செயற்படுமாறும் இல்லாவிடில் மனுதாரரை பதவியில் இருந்து நீக்கப்படுவீர்கள் என்றும் எச்சரித்துள்ளார். இதைத் தொடர்ந்தே இந்தப் பதவி நீக்கம் இடம்பெற்றிருந்தது.

இந்த நிலையில் முன்னாள் வடக்கு மாகாண செயலாளர் விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, மீன்பிடி, நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் மரியதாசன் ஜெகூ உறுதிகேள் எழுத்தாணை மனுவை வடக்கு மாகாண மேல் நீதிமன்றின் யாழ்ப்பாணம் அமர்வில் தாக்கல் செய்துள்ளார்.

தனது சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி குமாரவடிவேல் குருபரன் வழிப்படுத்தலில் சட்டத்தரணி பெனாசி பிரதீபன் இந்த உறுதிகேள் எழுத்தாணை மனுவை மனுதாரர் சார்பில் தாக்கல் செய்துள்ளார்.

மனுவில் தனது பதவி நீக்கல் தீர்மானத்தை இடைநிறுத்தி வைக்கும் இடைக்காலக் கட்டளை உள்ளிட்ட இன்னும் சில நிவாரணங்கள் கோரப்பட்ட நிலையில், இந்த வழக்கு வரும் ஜனவரில் 20ஆம் திகதி எதிர்மனுதாரர்களின் ஆட்சேபனைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (அ-ம-26)

## எலிக்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் இதுவரை 110 பேர் எலிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போதுவரை பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 28 பேரும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 8 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த 24 மணிநேரத்தில் (நேற்றுமுன்தினம் தொடக்கம் நேற்றுவரை) பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 6 நோயாளர்களும், யாழ். போதனா மருத்துவமனையில் 5 நோயாளர்களும் எலிக்காய்ச்சலுடன் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். கடந்த 24 மணிநேரத்தில் இந்தநோய் காரணமாக எந்தவொரு இறப்பும் ஏற்படவில்லை.

எலிக்காய்ச்சலுக்கு எதிரான தடுப்பு மருந்து வழங்கும் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. நேற்றுவரை ஏறத்தாழ 7 ஆயிரத்து 200 பேருக்கு தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் கால்நடைகளில் எலிக்காய்சல் தொற்று உள்ளதா என்று அறிவதற்காக பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (அ-ம-125-26-100-20)

## திரைமறைவு...

நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வின்போது, 'ஜனாதிபதி அநுரகுமாரவின் இந்தியப் பயணத்தில், இலங்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வகையிலான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளனவா?' என்று நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார கேள்வி எழுப்பினார். இதற்குப் பதில் வழங்கும் போதே, 'அவ்வாறு எந்தவொரு பாதகமான ஒப்பந்தங்களும் கைச்சாத்தாகவில்லை' என்று அமைச்சர் விஜித ஹேரத் கூறியுள்ளார்.

இதையடுத்து, 'எமது நாட்டு சக்தியை இந்தியாவுடன் இணைப்பது, இந்திய ரூபாவின் பயன்பாட்டை அனுமதிப்பது உள்ளிட்ட விடயங்களுக்கு ரணிலுக்கு ஆணை வழங்கியது யாரென இதற்கு முன்னர் அநுரகுமார திஸாநாயக்க கேள்வி எழுப்பி இருந்தார். எனவே, ரணிலின் நிகழ்ச்சி நிரலை இந்தியாவுடன் செயற்படுத்துவதற்கு தற்போதைய அரசுக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளதா?' என்றும் நளின் பண்டார எம்.பி. வினவியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், 'அநுரகுமார திஸாநாயக்கவுக்கு மக்கள் ஆணை கிடைத்துள்ளது. ரணிலுக்கு ஆணை கிடைக்கவில்லை. இலங்கையில் நாம் சக்தியை உற்பத்தி செய்வோம். மேலதிகமாக இருப்பவற்றை பொருளாதார ஒத்துழைப்பின் அடிப்படையில் பிம்ஸ்டெக் வலய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வோம். இது நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடிய விடயம். வருமானமும் கிட்டும்' என்று தெரிவித்தார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

Original ரஷ்யா Shih Tzu வகையைச் சேர்ந்த 8 மாத ஆண் நாய்க்குட்டியும் 5 மாத பெண் நாய்க்குட்டியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

**077 900 4515, 077 910 7153**

(CS 56931) P-1

### அரச...

அத்துடன் ஹர்ஷன சூரியப் பெரும, ரவி கருணாநாயக்க, ஹர்ஷன ராஜகருணா, நிமல் பலிஹேன, விஜேசிறி பஸ்நாயக்க, திலின சமரக்கோன் மற்றும் லக்மாலி ஹேமசந்திர ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

(அ-ம-இ)

# மரண அறிவித்தல்



## கதிரவேலு செல்வம்

**பிறப்பு** 13.08.1938 **இறப்பு** 13.12.2024

சுதுமலையைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் தெற்கு கும்பப்பிள்ளையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு செல்வம் அவர்கள் கடந்த (13.12.2024) வெள்ளிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தனலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், உதயகுமார், தர்மகுமரன், புவனகுமாரி, தவகுமரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான அழகேந்திரராசா, பஞ்சலிங்கம் மற்றும் தர்மராசா, மகாலிங்கம், முத்துலிங்கம், தவமணிதேவி, தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், தனபாலசிங்கம், செல்லம்மா, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுவர்ணா, ஜெயதர்சினி, இராஜகோபால், சிந்துஜா ஆகியோரின் மாமனாரும், அகவன், அகரன், ஆருத், ஆருஷா, ஷைலஜா, ஜாஜினி, ஆருஷ், அனுஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2024) வியாழக்கிழமை கோப்பாய் தெற்கு, கும்பப்பிள்ளையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் இருபாலை கிழக்கு நொச்சிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கும்பப்பிள்ளை,
கோப்பாய் தெற்கு.

தகவல் :
குடும்பத்தினர்
உதயன் - 074 152 6188
கமலா - 076 457 1889

(CS/56956) J-1

# மரண அறிவித்தல்

## அபிராமிப்பிள்ளை கேதீஸ்வரதாசன்



**தோற்றம்** 15.12.1943 **மறைவு** 16.12.2024

காரைநகர் மாப்பாணவூரியைப் பிறப்பிடமாகவும் வவுனியா, முந்தல் மாப்பாணவூரியை வசிப்பிடமாகவும் கொண்ட அபிராமிப்பிள்ளை கேதீஸ்வரதாசன் கடந்த (16.12.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை (தபாலதிபர் - மலேசியா), சுந்தரம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான விஜயதர்மா (பிரதம லிகிதர்) - சொர்ணம்மா (ஆசிரியை பால பண்டிதை) தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கேதீஸ்வரதாசன் (முன்னாள் தவிசாளர் காரைநகர் பிரதேச சபை - ஓய்வு பெற்ற தபாலதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், பிரபா (Group Finace Equitabe Life of - கனடா), Dr. கிருபா (கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை), செந்தூர்க்குமரன் (பொறியியலாளர் - USA), Dr. செந்தூர்வாசன் (DGH Horana) ஆகியோரின் பாசமிகு தாயாரும், Dr. ரவிச்சந்திரன் (கனடா), Dr.டிலினி காஞ்சனா (USA), Dr. ரிரானி பிரியதர்சினி (BH Panadura) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுவேதன் (கனடா), ஹரினி, புவனி (USA), நத்தாஷா, பிரார்த்தனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான தெய்வநாயகி, சபாபதிப்பிள்ளை, நளாயினிதேவி, கந்தையாபிள்ளை, சாம்பவமூர்த்தி, தனலஷ்மி, நித்தியலஷ்மி ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணசாமி, பராசக்தி, சரஸ்வதி, நல்லலிங்கம், சுப்பிரமணியம், ராஜேஸ்வரி, சிவமலர், குமரேஸ்வரதாசன், Dr.சுவர்ணலலிதா ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற கலாதேவி மற்றும் Dr. Mark Handalage ஆகியோரின் அன்புச் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.12.2024) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் காலை 7.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செந்தூர் வாசம்
மாப்பாணவூரி காரைநகர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
செந்தூர் (மகன்) +1512 7017 889
பிரபா (மகள்) +1226 9885 930
வாசன் (மகன்) +94 7729 14842

(CS/56942) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.